# சேர். பொன்னம்பலம் இராமநாதன்



## வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

# சேர். பொன்னம்பலம் இராமநாதன்
# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

"சொக்கன்"

பரமேஸ்வரக் கல்லூரி இயக்குநர் சபை வெளியீடு

முதற் பதிப்பு 1970

விலை ரூபா 2-75

அச்சுப்பதிவு :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

# FOREWORD

This biography of Sir Ponnambalam Ramanathan by one of our leading writers in Thamil, "Sokkan" (Mr. K. Sokkalingam) is the first in a series of Publications in Thamil, Sinhala and English on the Life and Works and achievements of Sir P. Ramanathan undertaken by the newly reconstituted Board of Directors of Parameshvara College.

The present generation has forgotten, that, for fifty years till November, 1930, this great son of Sri Lanka bestrode the country like a colossus among men. Since then false prophets have arisen among our people.

His record of service to the country and to his religion in and out of the legislature, has never been equalled by any man living or dead.

He was a great lawyer, a brilliant debator, a polished and eloquent orator, an outstanding administrator, a successful planter and above all, a philosoper and Brahma Gnani.

But his greatest and most enduring gifts are the Ponnambalawaneswarar Temple in Colombo; his endowments and charities for the propagation of the Shaiva religion and the teaching of Shaiva Scriptures; for the training of Hindu priests; and the establishment of Schools and Colleges — Parameshvara College and Ramanathan College — and the promise of a University of a unique type.

The Board requires the assistance of scholars and research students for collecting and compiling his speeches, writings and books and prepare a Bibiliography for the use of the present and future generations.

We ask for the cooperation of all religionists; of all races and communities for fulfilling the great and noble ideals of Sir P. Ramanathan.

Dear Reader, place "Sokkan on Ramanathan" in the hands of your children.

**S. R. Kanaganayagam,**
President,
Board of Directors of
**Parameshvara College**

Jaffna,
16-4-76.

# முன்னுரை

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு உரைக்கும் இந்நூலை ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான "சொக்கன்" எழுதியுள்ளார். புதிதாய்ப் புனரமைக்கப் பெற்றுள்ள பரமேசுவரக் கல்லூரி இயக்குனர் சபை, சேர் பொன். இராமநாதன் தொடர்பாகத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடவிருக்கும் பிரசுரங்களிலே இது முதலாவதாகும்.

ஈழ மாதாவின் மாபெரும் புதல்வரான இப்பெரியார், 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்நாட்டினை உன்னத நிலையில் வைத்திடப் புரிந்த பகீரதப் பிரயத்தனங்களை இன்றைய தலைமுறை மறந்துவிட்டது. அன்னாரின் மறைவின் பின்னரே போலித் தீர்க்கதரிசிகள் எம் மக்களிடையே தோன்றிய வண்ணம் உள்ளனர்.

சட்டநிரூபண சபைக்கு உள்ளேயும் வெளியேயும், நாட்டிற்காகவும், தமது மதத்திற்காகவும் அவர் நிலை நிறுத்திய சேவைச் சாதனைக்கு ஈடே இல்லை. இன்று வாழ்ந்து கொண்டிருப்போரிலும் வாழ்ந்து மறைந்து போனவரிலும் அவருக்கு இணை காண்பது இயலாது

அவர் சிறந்த நியாயவாதியாகவும், ஆற்றல் நிறைந்த சொற்போர் நிபுணராகவும், பண்பட்ட உன்னத நாவல்லோராகவும், திறமைசால் நிருவாகியாகவும், வெற்றியுடன் தோட்டங்களை உண்டாக்கியவராகவும், இவை யாவிலும் மேலாக மிக்குயர்ந்த மெய்யியலாளராகவும், பிரம ஞானியாகவும் விளங்கினர்.

ஆயின், அவரின் மன்னிய மாபெருங் கொடைகள் எவையெனிற் கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் ஆலயமும், சைவசமய வளர்ச்சிக்கென வழங்கியுள்ள நினைவு நிதிகளும், தானங்களும், பன்னிரு திருமுறைப் பயிற்சிக்கான கொடைகளும், சைவ ஆசாரியப் பயிற்சிக்கான நிதியுதவியும், பரமேசுவர, இராமநாதன் கல்லூரிகளும் தனித்தன்மை பொருந்திய பல்கலைக் கழக அமைப்பிற்கான உறுதியுரையுமேயாம்.

நிகழ்கால, எதிர்காலத் தலைமுறையினர்க்கு உதவும் வகையிலே சேர் பொன்னம்பலம் இராமநாதனது சொற்பொழிவுகளையும், எழுத்துப் படைப்புக்களையும் தொகுத்து விரிவானதோர் அட்டவணையினைத் தயாரித்தற்கு இவ்வியக்குனர் சபை, அறிஞர்களதும், ஆராய்ச்சி மாணவர்களதும் உதவியை நாடுகின்றது.

சேர் பொன் இராமநாதனின் இலட்சியங்களை நிறைவு செய்ய ஒத்துழைக்கும் வண்ணம் எல்லா மதத்தினரையும், எல்லா இனத்தினரையும், எல்லாச் சாகியத்தினரையும் வேண்டுகின்ரேம்.

அன்பார்ந்த வாசகரே, இராமநாதன் பற்றிச் 'சொக்கன் எழுதிய நூலை உங்கள் பிள்ளைகளின் கைகளிலே தவழச் செய்வீர்களாக.

சு. இ. கனகநாயகம்
தலைவர்,
பரமேஸ்வரக் கல்லூரி
இயக்குனர் சபை

யாழ்ப்பாணம்
16-4-76

# அணிந்துரை

பேராசிரியர் க. கைலாசபதி
தலைவர், இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகம்.

இலங்கையின் தவப்புதல்வர்களில் ஒருவர் சேர் பொன் இராமநாதன் என்பதில் என்றும் எவர்க்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலமாக இலங்கையின் அரசியல் வானில் ஈடிணையின்றிப் பிரகாசித்த இராமநாதன் அவர்கள், இவ்வுலகிலே 'தம்புகழ் நிறீஇச் சென்ற' பெருமக்களுள் ஒருவர் என்பதை ஊரும் உலகமும் ஒப்புக்கொண்டுள்ளன. அன்னாரின் நினைவாக அண்மையில் முத்திரை வெளியிட்டும், அன்னார் தூரதிருஷ்டியுடன் நிறுவிய பரமேசுவரக் கல்லூரியை இலங்கைப் பல்கலைக்கழக யாழ் - வளாகத்தின் நடுமையமாகப் பிரகடனஞ் செய்து, அங்கே வளாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டும், அரசு அன்னாருக்குச் சிறப்புச் செய்திருப்பதை நாம் காண்கிறோம் இராமநாதன் அவர்கள் தேசியப் பெருமக்கள் வரிசையில் நிலையான இடம் பெற்றிருப்பதை இத்தகைய பாராட்டுச் செயல்கள் தொடர்ந்து நினைவூட்டுவனவாய் உள்ளன.

வரலாற்றிலே இராமநாத வள்ளலுக்கு அழியாத இடமிருப்பினும், அவரது வரலாற்றினை எழுதியோர் மிகச் சிலரே பார காவியம் பாடத்தக்கோர் ஒவ்வொரு மொழியிலும் அருமையாகவே வந்தமைவர். அதுபோலவே, பல்துறைப் புகழீட்டிய பெருமக்கள் சரிதங்களைத் தக்கமுறையில் எழுதவல்லோரும் அருந்தலாகவே உள்ளனர் போலும் நிறைபுகழாளராய் நீண்ட காலம் வாழ்ந்த இராமநாதன் வாழ்க்கை வரலாறு, சென்ற நூற்றாண்டையும் இந் நூற்றாண்டையும் இணைக்கும் வரலாற்றுத் தொடர்பேடாகவும் விளங்கக் கூடியதாகும் இதனாலோ என்னவோ, வள்ளலின் வாழ்க் கைச் சரிதத்தை எழுதத் துணிந்தோர் இலராயினர். அண்மையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல் (முதற் பாகம்) இதற்கு விதிவிலக்கு எனலாம்.

சான்றோர் புகழ் பொன்றாதாயினும், காலத்துக்குக் காலம் அவர்தம் வாழ்க்கையையும் பணியையும் சாதனைகளையும் நினைவு கூர்வதும், அவசியமேற்படின் அவற்றை மறுமதிப்பீடு செய்வதும் புது விளக்கங் காண்பதும் காட்டுவதும், ஒப்பியல் நோக்கில் ஆராய்வதும் பின்வரும் வாரிசுகளின் கடமையும் தேவையுமாகும். இராமநாதனைப் பொறுத்தமட்டில் இவ்வாறான மதிப்பீடு இதுவரை நடைபெற்றிருப்பதாய்த் தெரியவில்லை. இது கவலைக்குரியது கூர்ந்து நோக்கின், இத்தகைய மதிப்பீடும் விளக்கமும் இன்மையாலேயே இராமநாதனுக்குப் பின்வந்த நமது அரசியல் வரலாறு பெரிதும்

வேறுபட்டுத் தோன்றுகிறதெனலாம். இது நுனித்து நோக்க வேண்டியது.

இராமநாதனுக்குப் பின், அவர் போற்றி வளர்த்து வந்த அரசியல் மரபு நம்மவராற் பேணப்படவில்லை என்பது வெளிப்படை. இவ்விடையீட்டினுல் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகளும் பல இராமநாதன் ஆறுமுகநாவலர் மரபிற்குப் புதிய பரிமாணங்களைக் கண்டவர்; நாவலர் மரபிற்கோர் காவலராயிருந்தவர் ஆழமும் அகலமும் அம்மரபினேர் பார்வையின் தனிச் சிறப்பியல்புகள். இன்று அவ்வியல்புகள் — நிலைப்பாடுகள் — நமக்கு நனிவேண்டப் படுவன. பண்டித நேரு Discovery of India, "இந்திய தரிசனம்" — என்ருெரு நூல் எழுதினுர். இந்தியாவின் ஆத்மாவை — உள்ளூரத்தை — உயிராற்றலை — அவர் தேடிக் காண முயன்றமையை நூலின் தலைப்பு வெளிப்படுத்துகிறது என்று கொண்டால் அது தவருகாது. அதுபோல, இராமநாதன் மரபை — வாழ்க்கை இலட்சியத்தை — இயக்க சக்தியை — நாம் இன்று தேடிக் கண்டுகொள்ள வேண்டும்; அதனை நமதாக்கிக் கொள்ளவேண்டும். அவர் வாழ்க்கைச் சரிதத்தைப் படிப்பதன் மூலமும், கடந்த நான்கு தசாப்தங்களாக நாம் நடந்து வந்த பாதையைப் பரிசீலனை செய்வதன் மூலமும், எல்லாவற்றுக்கும் மேலாக, நம்மை நாமே ஆழமாக ஆத்ம சோதனை செய்வதன் மூலமுமே உண்மையைத் தெளிதல் சாலும்.

வாழ்க்கைச் சரிதங்கள் சம்பந்தப்பட்டவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை நிரைப்படுத்திக் கூறுவதற்காகவோ, சுவையான நிகழ்ச்சிகளை விவரிப்பதற்காகவோ, அல்லது பிரசித்தமான பொன்மொழிகள் 'பிறந்த' சந்தர்ப்ப சூழ்நிலையை அறிந்து கொள்வதற்காகவோ மட்டும் அமைந்தன அல்ல. கால தத்துவத்தையும் மாந்தரின் இயல்பையும் ஏற்றத்தையும் நுண்ணிதில் அறிந்துகொள்வதற்குச் சரிதங்கள் உதவுவன. ஆங்கிலக் கவி லோங் ஃபெல்லோ பாடியது போன்று,

*காலவெள் ளத்தின் கரையில் அனைவரும்*
*வேலை செய்யும் விற்பனச் சிற்பிகள்*
*அரும்பெரும் செயல்கள் ஆற்றுவர் சில்லோர்*
*இழிந்தவை தாழ்ந்தவை என்பதங் கில்லை*
*எழுந்தவை யனைத்தும் ஏற்றவை யாகும்...*

*...........................................*

*கடவுளும் உலகமும் கண்டு மகிழத்*
*திடமுடன் வேலையைச் செய்து முடிப்போம்*
*ஆழ்ந்தும் அகன்றும் அடிப்படை யிட்டுத்*
*திறம்பட இன்றே திருத்தி அமைத்திடின்*
*நாளை வேலையும் நன்கு நிலைபெறும்.*

முந்தையோர் செயல் எமக்கு நம்பிக்கையையும் அடக்கத்தை யும் தரல் வேண்டும். இதனாலேயே சரிதங்கள் பயனுள்ள படிப் பினைகளையும் நமக்குத் தரவல்லனவாயுள்ளன. ஒவ்வொரு தலை முறையினரும் தத்தம் காலச் சூழ்நிலைகளுக்கு இயையவும், தாம் சமாளிக்க வேண்டியுள்ள சவால்களுக்கு இயையவும் தமது முன் னோரின் வாழ்க்கைச் சரிதங்களிலிருந்து தெம்பும் தெளிவும் பெறு வதே அறிவுடைச் செயலாகும். வரலாற்றின் பிரதான பயன்பாடும் அதுதானே.

இன்று நமது இளஞ்சந்ததியினர் இராமநாதனைப் பற்றிச் சுருக்க மாகவேனும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பான நூல்கள் இல்லை. இக்குறையை ஓரளவு நிவிர்த்தி செய்யும் பொருட்டுப் பரமேசுவரக் கல்லூரி இயக்குநர் சபை இந்நூலை வெளியிடுகிறது. வள்ளல் விட்டுச் சென்ற அறவுடைமைகளைப் பரிபாலித்துவரும் சபை இது வென்பது பலரும் அறிந்ததே. இளஞ் சந்ததியினரைச் சிறப்பாக மனங்கொண்டு எழுதப்பெற்றுள்ள இந்நூலின் ஆசிரியர், அறிவும் அநுபவமும் நிரம்பிய திரு க சொக்கலிங்கம் அவர்கள். "சொக் கன்" என்ற புனைபெயரிற் பல நூல்களை இயற்றிய இவர், நாட றிந்த இலக்கியகர்த்தா. ஏலவே நாவலர் ஆய்வு நூலொன்றை ஆசிரியர் எழுதி வெளியிட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழிலக்கிய இலக்கண சாத்திர நூற்புலமையுடன், தமிழ்ப் பண் பாட்டு உணர்வுடன் வாழ்ந்த தலையாய தமிழ் மகனாகவும், இந் நாட்டின் சமூகங்கள் அனைத்தின் ஒற்றுமையையும் உயர்வையும் உள்ளிய உத்தம தேசியவாதியாகவும், பன்மொழிப் புலமையாலும், ஞானமார்க்கத்தாலும் ஞாலத்தைத் தழுவிய சர்வதேசியவாதியாக வும் முழுமையான வாழ்க்கை நடத்திய 'நவ சனகர்' இராமநாதன். அவரது பன்முகப்பட்ட சிறப்பியல்புகளையும் ஆளுமையையும் இயன்ற வரையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் விவரித்திருக்கிறார் ஆசிரி யர். எனினும் இராமநாதனின் ஆன்மிகநோக்கும் போக்குமே நூலாசிரியரைப் பெரிதுங் கவர்ந்துள்ளமை நூலைப் படிப்பார்க்குப் புலனாகும். நூலாசிரியர் காணும் பெரியார் அவ்வாறிருக்கிறார் போலும். அத்தகைய சித்திரிப்பு உண்மைக்குப் புறம்பானது என் றும் கூறுதற்கில்லை பல சிறப்பம்சங்களில் ஒன்றினை நூலாசிரியர் அழுத்திக் கூறியிருக்கிறார் என்றே அமைதி காணல் வேண்டும்.

இராமநாதனின் நூற்றுஇருபத்தைந்தாவது ஜயந்தி தினத்தைக் கொண்டாடுமுகமாக வெளியிடப்படும் இந்நூல் நம்மவரால் உவந்து ஏற்கப்படும் என்பதில் எனக்கு எதுவித ஐயமுமில்லை.

# முகவுரை

1973 ஆம் ஆண்டிலே சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பற்றி 'ஈழத்துச் சனகர்' என்ற தலைப்பில் ஈழநாடு வார இதழ்களிலே எழுதி வந்தேன். அக்கட்டுரைத் தொடரை வாசித்த பெரியார்கள் பலரும், நண்பர்கள் சிலரும் தமது பாராட்டு தல்களைத் தெரிவித்தனர். எனினும், அவை என்றோ ஒரு நாள் நூல் வடிவம் பெறும் என்று நான் நினைத்திருக்கவில்லை.

இந்நிலையிற் பரமேசுவரக் கல்லூரி இயக்குனர் சபையார் இராமநாதனின் நூற்றிருபத்தைந்தாவது ஜயந்தியை ஒட்டி அப் பெரியாரின வரலாற்றினைச் சுருக்கமாக எழுதித் தருமாறும், அதனைத் தாம் நூலாக்குவதாகவும் குறித்தனர். இவ்வேண்டுகோள் நான் முற்றிலும் எதிர்பாராதது. அதனோடு 'ஈழநாட்'டில் வெளியான கட் டுரைகளைப் புத்தகமாக்குவதற்கு உகந்த முறையிலே திருத்தி எழுத வும் எனக்குப் போதிய அவகாசம் இல்லை. எனவே, சபையாரின் வேண்டுகோளை மிகவும் தயக்கத்துடன்தான் ஏற்றுக்கொண்டேன்.

மூன்று ஆண்டுகளின் பின்பு ஈழநாடு பழைய பிரதிகளைத் தேடியபொழுது அவை அந்தர்த்தயானமாகிவிட்டதைக் கண்டு அதிர்ச்சியடைநதேன. எனினும் அதிர்ச்சியை ஏமாற்றமாக்கிச் சோர்ந்திருக்கும் வழக்கம் நான் அறியாதது. உடனடியாக ஈழ நாட்டின் மேலாளர் திரு. து ஸ்ரீநிவாசகம், பிரதம ஆசிரியர் திரு. மு. கோபாலரத்தினம் ஆகியோருடன் தொடர்புகொண்டு அவர் களின் அன்பான அநுமதியோடு, ஈழநாடு அலுவலகத்திலே பழைய ஈழநாடு கோவைகளைத் (Files) தேடி மிகுந்த சிரமத்திற் கிடையிற் பழைய பிரதிகளைக் கண்டுபிடித்தேன. இந்த வகையில் உதவி புரிந்த மேற்குறித்த இருவருக்கும் எனது கடப்பாட்டினை இதயபூர்வமாகத் தெரிவித்துக் கொள்கினறேன்.

பிரதிகள் கிடைத்து விட்டன. இனி அவற்றை நன் முறையிலே படி எடுத்தல் வேண்டும். எனக்கோ மிகவும் நெருக்கடி நிறைந்த நேரம். மிக முக்கியமான அலுவல் கருதி நான் வேறிடம் சென்று சில நாட்கள் தங்கவேண்டி இருந்தது. இந்த நெருக்கடியின் போது ஆபத்பாந்தவர்களாய் முன்வந்து படியெடுத்துதவிய ஈழநாடு பத்திரிகையைச் சேர்ந்த திரு. பாலசிங்கம், ஆசிரிய நண் பர் திரு. க. சிவராசா ஆகியோரின் உற்றுழி உதவிக்கு என் உளங் கனிந்த நன்றி என்றும் உரியதாகும்.

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தின் தலைவரும், பரமேஸ்வரக் கல்லூரி இயக்குனர் சபைச் செயலாளரும், நண்பருமான பேராசிரியர் க. கைலாசபதி கையெழுத்துப் பிரதி நிலையிலிருந்த கட்டுரைகளை வாசித்துப் பல திருத்தங்களையும் ஆலோசனைகளையும் வழங்கினர். மிகுந்த பொறுப்பும் வேலை நெருக்கடிகளும் நிறைந்த ஒரு பதவியிலிருந்து கொண்டும் எனக்காக நேரம் ஒதுக்கி இவ்வுதவியினைச் செய்த அவரின் அன்புக்கும், பண்புக்கும் என்றென்றும் கடப்பாடுடையேன்.

எனது கடமையை அடிக்கடி நினைவூட்டியும், ஊக்கியும் வந்த பரமேஸ்வரக் கல்லூரி இயக்குனர் சபையாருக்கு, சிறப்பாகச் சபையின் பொருளாளரும் பெருமனம் படைத்தோருமான திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களுக்கு எனது அன்பு நிறை நன்றி உரியதாகுக.

இந்நூலை எழுதுவதற்குச் 'சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்க்கை' (The Life of Sir Ponnambalam Ramanathan) எனனும் ஆங்கில நூல் பெரிதும் உதவிற்று அந்நூலின ஆசிரியரான திரு M. வைத்திலிங்கம் அவர்களுக்கும நன்றி கூறுவது என் கடன.

இந்நூல் இளைஞர்களான மாணவர்களை உளங்கொண்டு எழுதப்பட்டது. ஆழ்ந்த ஆராய்ச்சிக்கோ, விரிந்த செய்திகளுக்கோ இதனை நாடுவோர் ஏமாற்றமே அடைவர். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதக்கூடிய ஆற்றலும், தகுதியும், உரிமைப்பாடும் உடையோர் என்னிலும் பலர் உளர் என்பதும நான் அறியாததன்று. அன்றியும் சபையார் வெளியிடும் முதலாவது நூல்தான் இதுவன்றி முடிந்த நூலாக இதனைக் கொள்ள வேண்டுவதில்லை. எனவே, இதன்கண் குற்றம் குறைகள் காணப்பட்டால் அவற்றைப் பெரிதுபடுத்தாது, பொறுத்துக்கொள்ளும் வண்ணம் அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இந்நூலினைக் குறுகிய காலத்திலே சிறந்த முறையிலே அச்சிட்டு உதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சக உரிமையாளர் திரு. சி. ச. குமாரசுவாமி அவர்களுக்கும் இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“வாணி”
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
16-4-76

க. சொக்கலிங்கம்
( சொக்கன் )

# பொருளடக்கம்


1. இராமநாதன் — இலங்கையன்னையின் ஈடில்லாப் புதல்வன் 1

2. இராமநாதனின் பாரம்பரியம், பிறப்பு, வளர்ப்பு ... 10

3. இராமநாதன் கற்ற கல்வியும் கல்வி வழிகாட்டிகளும் ... 16

4. இராமநாதன் — நியாயவாதி, சட்ட நிருபணசபை உறுப்பினர் 22

5. இராமநாதனின் ஆத்மஞானம் ... ... 29

6. இராமநாதனின் கல்விப் பணிகள் ... ... 35

7. இராமநாதனின் வாழ்க்கைத் துணைவி ... 44

8. இராமநாதனின் குண நலன்களும், பலதுறை ஆற்றல்களும் ... 49

9. சமகாலப் பெரியோர்கள் ... ... 55

10. இராமநாதன் — வாழ்த்தும் வாக்கும் ... 64

11. இராமநாதன் இயற்றிய நூல்கள் ... ... 75

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

(சொல்லான் — சொல்லைக் கூறுபவன்)

**திருக்குறள்** — பொருட்பால், அமைச்சு 5.

# 1. இராமநாதன் — இலங்கையன்னையின் ஈடில்லாப் புதல்வர்

**கனம் இராமநாதன் அவர்கள்:** ஐயன்மீர், இந்த முறையீடுகளை வாசிக்கையில் எனக்கு மிகவும் கவலையுண்டாகிறது. இந்நாட்டு மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பெருந்துரதிருஷ்டத்திற்காய்க் கலங்கி நொந்து புலம்புகின்றனர். இந்நிலை ஏற்பட்டமைக்கு அவர்கள் பொறுப்பாளரல்லர். எனவே அவர்கள், தமது துயரத்தினின்று மீள, நான் ஏதாவது செய்தேயாக வேண்டும். நீங்கள் மிகுந்த கருணையுடையீர்; என்னுடன் தனிப்பட்ட நட்பும் உங்களுக்கு உண்டு. அசாதாரணமான இந்த அவலச் சூழ்நிலையிலே மக்களின் நன்மை கருதி நீங்கள் பணிபுரிவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். வளர்ந்தோராகிய ஆண் பெண்களிடையே சென்று நான் விசாரித்த பொழுது, உங்களின் அடக்குமுறைச் சட்டத்தினல் விளைந்த விளைவுகளைக் கூறி, அவர்கள் கண்ணீர் பெருக்கினர். மாட்சிமை பொருந்திய உங்கள் ஆணை

யாளர்களின் உரிமை கடந்த செய்கைகளும், சட்ட வரம்பற்ற செயல்களுமே இந்தத் துயர நிலைக்கெல்லாம் காரணமாகும். இவ்வாணையாளர்கள், தாம் அநுபவமற்றவர் என்பதையும் அறியார். நீதித் தொடர்பான விடயங்களிலே இவர்கள் குறைபாடுடையவர்கள்.

**மாட்சிமை தங்கிய தேசாதிபதி :** திரு. இராமநாதன் அவர்களே, நீங்கள் குறிப்பிடும் ஆணையாளர்களில் மூவர் இங்குச் சமுகமளித்துள்ளனர். உங்களின் குற்றச்சாட்டு இவர்கள் மீதன்று என்பது என் நம்பிக்கை.

**கனம் இராமநாதன் அவர்கள் :** ஐயன்மீர், அவர்கள் எழுந்து நின்று விடையளித்தல் வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

**மாட்சிமை தங்கிய தேசாதிபதி :** எந்த அங்கத்தவருக்கு எதிராகவும் உங்கள் குற்றச்சாட்டு அமையாது என்று நம்புகின்றேன்.

**கனம் இராமநாதன் அவர்கள் :** ஐயா, இந்த விசேட ஆணையாளர்களின் செயல்களை நான் கண்டுள்ளேன், கேட்டுமுள்ளேன்.

**மாட்சிமை தங்கிய தேசாதிபதி :** உங்களின் அபிப்பிராயம் இந்தச் சபையின் அங்கத்தவர்கள் பற்றியதன்று எனக் கொள்கிறேன்.

**கனம் இராமநாதன் அவர்கள் :** தனிப்பட்ட நட்பினுலே பொதுப் பணிகள் பாதிக்கப்படல் கூடாது. இதுவே என் கருத்தாகும். இந்நாள் எனக்கு மிகவும் மனச் சங்கடமான நாள். மனத்திற்கு மகிழ்ச்சி தராத செயல் ஒன்றை நான் செய்ய நேர்ந்துள்ளது. ஆனுல், என்னதான் நேர்ந்தாலும் அதனை நான் செய்தேயாக வேண்டும். ஏனெனில், மக்களின் நியாயமான வேண்டுதற் குரலானது கடவுளுக்கும், பிரித்தானிய சிம்மாசனத்திற்கும், உங்களுக்கும் விருப்பமான ஒன்ருகவே இருக்கும். கனந்தங்கிய அங்கத்தவா எவரா

வது இச்சபையிலே குற்றஞ் சாட்டப்பட்டால் அவரெழுந்து நின்று, "நான் பிழை செய்துவிட்டேன், எனவே எனது பதவியை நான் துறந்தல் வேண்டும். எனக்குப் பதிலாகத் தகுதிவாய்ந்தோர் அறிவுரைகள் கூறட்டும். எவ்விதம் இந்தக் கடமைகள் ஆற்றப்பட்டிருத்தல் வேண்டுமோ அவ்வாறு ஆற்ற நான் தவறிவிட்டேன்" என்று கூறுதல் வேண்டும்.

மாட்சிமை பொருந்திய தங்களதும், கனந் தங்கிய அங்கத்தவர்களதும் மன்னிப்பினை முதற்கண் நான் கோரவேண்டியுள்ளது. எனது கடமையை நான் ஆற்றும்பொழுது அவர்களுக்கு வருத்தம் தரத்தக்க விடயங்களை நான் சொல்ல நேரிடலாம். ஏன்? உங்களிலும் எனக்குத்தான் அதிக கவலையுண்டாகும். ஆதலால் என்னோடு சேர்ந்து அதைச் சகித்துக் கொள்ளுமாறு முதலிலேயே வேண்டிக் கொள்கிறேன். ஏனெனில், சிக்கல் நிறைந்த இந்தச் சூழ்நிலையிலே அதிகார வர்க்கத்தின் அறிக்கையொன்று மட்டுமே ஆராய்விற்கு எடுக்கப்படலாகாது. இதற்கு மறுபக்கமாய் உள்ள மக்களின் அறிக்கையும் கவனமாகவும், பாரபட்சமின்றியும் ஆராயப்படல் வேண்டும். நான் மக்களின் சார்பாக உள்ள நியாயங்களை எடுத்துரைக்கவே உங்கள் முன் எழுந்து நிற்கின்றேன்.

அரசரின் பணிப்பினை ஏற்று ஊழியம் புரிவோர் எப்பொழுதும் தங்கள் கண்களை அகலத் திறந்து கொண்டு, மக்களின் திருப்தி ஒன்றையே தமது மாபெரும் இலட்சியமாகக் கருதிப் பணியாற்ற வேண்டுவது அவசியமாகும். அவர்கள் மக்களின் உரிமைகளையும் உடைமைகளையும் காத்திடுவர் என்று நாம் எதிர்பார்ப்பது முற்றிலும் நியாயமானதே. பிரித்தானிய அரசின் நீதியின் மீது மக்களின் நம்பிக்கையை ஈடாடச் செய்யத்தக்க வகையில் எக்கருமமும் நிகழல் கூடாது.

1915 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் தேதி தொடக்கம் யூன் மாதம் 5 ஆந் தேதி வரை இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தையடுத்து, இலங்கைச் சட்ட நிரூபணசபையிலே இராமநாதன் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டுள்ளது.

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

என்றும்,

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

என்றும்

முறையே அரசனதும், அமைச்சனதும் இயல்புகளைத் திருவள்ளுவப் பெருந்தகை எடுத்துரைத்துள்ளார். அவரின் பொன்மொழிக்கு இந்த நூற்றாண்டிலே எடுத்துக் காட்டாகச் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் விளங்கினாரென்றால் அது மிகையன்று. இக்கூற்றிற்கு மேற்குறித்த பேச்சினையே நாம் சான்றாக எடுத்துக் காட்டலாம். இலங்கைத் தமிழினம் மட்டுமன்றி எல்லா இன மக்களுமே 'இவர் எம் தலைவர், வழிகாட்டி' என்று பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல ஒருவர் இருந்தார் என்றால், அவர் இராமநாதனேயாவர். இலங்கை அன்னையின் ஈடில்லாப் புதல்வர் ஈழகேசரியான இப்பெருமகனே என்பதை எவருமே மறுக்கார்.

ஆடம்பரச் சூழ்நிலை, ஆங்கிலக் கல்வி ஆகியவற்றின் மத்தியிலே வாழ்ந்தாலும் இராமநாதன் எமது மொழி, மதம், கலை, கலாசாரங்களின் பிரதிநிதியாகவே துலங்கியவர் என்பதை அடுத்து வரும் இயல்களிலே நாம் விரிவாகக் காணலாம். இந்நாட்டின் பெரும்பான்மை மக்களான சிங்கள மக்களுக்கு, ஆனந்தாக் கல்லூரியிலே நிகழ்த்திய சொற்பொழிவில் அவர் கூறிய அறிவுரைகள் அவரின் தீர்க்கதரிசனத்துக்கும், மொழி, மதப் பற்றிற்கும் நிலைத்த சான்றுகள் எனலாம்.

"காலஞ்சென்ற கிளாஸ்டன் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் தமது பிரசித்தி வாய்ந்த அரசியற் பிரசாரக் கூட்டம் ஒன்றிலே, குழுமியிருந்த பல இன மக்களையும் நோக்கிப் பின்வருமாறு கூறினர். "ஆங்கிலேயன் ஒவ்வொருவனும் ஆங்கிலேயனுகவும், ஸ்கொத்லாந்தியன் ஒவ்வொருவனும் ஸ்கொத்லாந்தியனுகவும், அயர்லாந்தினன் ஒவ்வொருவனும் அயர்லாந்தினனுகவும் விளங்கல் வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். இவ்வாறு நான் எதிர்பார்ப்பதற்கான காரணம் மிகவும் எளிதானது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியானது அந்நாட்டின் தேசீய சத்திகளிலேயே தங்கியுள்ளது என்பதே அக்காரணம்." ஒரு நாட்டின் தலைவர்கள் தேசீய உணர்வற்றவர்களாயின் அவர்கள் தம் நாட்டு மக்களின் நிரந்தர நன்மையைத் தூண்டிவிடும் சத்திகளாய் இலங்குதல் இயலாத காரியமாகும். எனவே தேச நன்மையைக் கருதித் தலைவர்கள் தேசீய உணர்வோடு செயலாற்றுதல் அவசியமாகின்றது."

"எவ்வளவுதான் பரந்த மனப்பான்மையுடன் தலைவர்கள் தமது வாழ்வினை நடத்தினுலும், அரசியற் பயன் கருதியாவது அவர்களின் தேசீய உணர்வு பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். இல்லையேல் மக்களை மேனிலைப் படுத்தல் இயலாததாகிவிடும். எனவே உங்கள் நன்மையினைக் கருத்திற் கொள்ளாவிடினும், மக்கள் நன்மையைக் கருதியாவது நீங்கள் சிங்கள் மொழியைப் பயன்படுத்துவதில் விருப்பம் கொள்ளல் வேண்டும். இதில் நீங்கள் தவறுதல் கூடாது..."

"நாங்கள் ஆழமான சமய உணர்வு உடையோம். கண்ணுக்குப் புலனுகாத மறு உலகினைக் கருத்திற் கொண்டே நாம் வாழ்கின்றோம். அவ்வுலகம் பௌத்த பாளி மொழியிலே **அமதபதம்** அல்லது **நிர்வாணம்** என அழைக்கப்படுகின்றது. அஃதாவது நாம் ஆன்மிக வாழ்விலே பற்றுடையோம் எனலாம். இந்நிலையில் இழிவு நிறைந்த உலகாயத மனப்போக்கானது எமது

இல்லங்களிலே தலையெடுத்து இளைஞர்களைப் பாழாக்கி வருதல் கண்டு என் நெஞ்சம் பெரிதும் நோதலை அடைகின்றது. சிங்களவன் ஒவ்வொருவனும், தமிழன் ஒவ்வொருவனும் இந்நாட்டிலே பெருக்கெடுத்தோடும் விதேசிய மனப்பான்மைக்கு எதிராகக் குரலெடுத்துத் தமது எதிர்ப்பைப் புலப்படுத்தல் வேண்டும் என நான் உணர்கிறேன். இதன் பொருள் நான் மேற்கு நாட்டினரை எதிர்க்கிறேன் என்பதன்று. அவர்களிடையே தோன்றிய பெரியோர் யாவரும் உண்மையிற் பெரியோரேயாவர். அவர்கள் மிகவும் நல்லவர்கள். எம்மை முன்னேற்ற ஆர்வமும், முயற்சி விருப்பும் உடையோராய் ஆக்கியவர்கள் அவர்கள்தாம். நேர்மையுடன் செயலாற்றவும், மிகக் கீழ்நிலையில் வாழ்வோர்க்கும் நீதியாயிருக்கவும் அவர்கள் எமக்குக் கற்பித்தார்கள். எம்மை முன்பு ஆண்டவர்களின் இழிச் செயல்களால் நாம் இழந்திருந்த சமுதாய தருமங்கள் பலவற்றையும் அவர்கள் எமக்கு மீண்டும் அளித்தார்கள். இவை யாவுக்கும் நன்றி செலுத்துவது எம் நீங்காக் கடனேயாகும். இருப்பினும் இவ்வாங்கிலேயர்களிற் சான்றோர்களாய் விளங்குவோராலும் கண்டிக்கப்படுவதான உலோகாயத தீமையையே நான் எதிர்க்கின்றேன். நாங்கள் ஆன்மிகவாதிகள். ஆன்மஞான ஆராய்ச்சியில் எமக்கு விருப்பம் அதிகம். இந்த விருப்பம் திருப்திப்படுத்தப்படல் வேண்டும். சிங்கள பாளி மொழிகளைக் கற்று அவற்றின் வாயிலாக ஆன்மவிசாரம் செய்து 'எல்லையறு பரம் பொருள்' பற்றிய உணர்வினை அடையப்பெறுதவன் சிங்களவனே அல்லன் என்பேன்..."

"... சிங்கள மொழிக் கல்வியை உங்கள் முழுமையான ஆற்றலையும் பயன் செய்து வளர்த்தல் வேண்டும், ஆங்கிலம் தேவைப்படாத இடங்களிலெல்லாம், அதனைத் தவிர்த்துச் சிங்களத்தையே பேசுதல் வேண்டும். இப்படிச் செய்வீர்களாயின் நீங்கள் உங்கள் தாய்நாட்டிற்கு உண்மைப் பணியாற்றுவதாய் நான் கூறுவேன். அவ்வாறு செய்யாது உள்ளும் புறமும் மேற்கு நாகரிகத்

தையே பூண்டவர்களாய், உங்கள் மொழியினைப் பொது மேடைகளிலும், புகையிரதப் பெட்டிகளிலும், இல்லங்களி லும் பேசக் கூசுபவர்களாய், உங்கள் தேசீய நிறுவனங் களைப் பாதுகாக்க முனவராதவர்களாய் இருப்பீர்களா யின் உங்களில் ஒருவர்கூடச் சிங்களவர் என்று கூறத் தகுதியற்றவராகிவிடுவீர்கள். 1,800,000 சிங்கள மக்க ளும் நிலை தடுமாறி மறைந்து இல்லையேயாகிவிடுவீர் கள். தேசமே நாசமாகும். சிங்கள மொழி விரைந்து அழிவதை நடுங்கும் முழங்காலுடன் நின்று எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு நாம் ஆளாவோம். ஆங்கிலோ சாக்சனியர் மறையவில்லையா? நோமானியர் மறைந்து போகவில்லையா? பல்வேறு தேயங்கள் மாய்ந்தொழிய வில்லையா? அசீரியர் எங்கே? கிரேக்கரும், உரோம ரும் என்னவாயினர்? அவர்கள் யாவரும் எங்கே? விதேசியங் காரணமாகப் பூமுகத்திலிருந்தே முற்றாகத் துடைக்கப்பட்டனரன்றே? அந்நிய இலட்சியங்கள், பயிற்சிப் பண்புகள் யாவிற்கும் தமது நாடுகளின் கதவு களை அகலத் திறந்து விட்டமையாலும், தங்கள் சொந்த நாகரிகத்தோடு இணைந்து போகாமையாலுமே இந்த மாபெரும் அழிவு நேரிடலாயிற்று."

இவ்வாறு இந்நாட்டின் பேரினத்திற்கு அறிவுரை பகர்ந்த இப்பெருமகன் தாம் சொன்னவற்றைத் தம் வாழ்விலும் கடைப்பிடிக்கத் தவறவில்லை. உடை, உணவு, உரையாடல் யாவிலும் அவர் 'தமிழ்க்கனவான்' என்ற பதத்திற்கு முற்றிலும் பொருந்தவே வாழ்ந்து தமிழர்க்கு வழி காட்டினர். சகோதர இனத்தினரை உளமார நேசித் துப் பரந்த தேசீயவாதியாய் விளங்கிய அதேவேளையில் இராமநாதன் சைவம், தமிழ், தமிழ்ப்பண்பாடு ஆகிய வற்றை உயிர் போன்று பேணியமை எமக்கெல்லாம் கலங்கரை விளக்கமாகும்.

இலௌகிக வாழ்விலே தேசீயத்தைப் போற்றிய அவர் ஆன்மிகத்திலே முதிர்ந்து கனிந்த வேளையிலே தம்மைச் சர்வதேசக் குடிமகனுய்க் கருதலானுர். 'உலகம்

யாவும் என் வீடு, உலகினர் யாவரும் என் உடன் பிறந்தோர்' என்ற மனப்பான்மை அவரிலே வளர்ந்து ஓங்கலாயிற்று. அடுத்து அவர் தேசீய சர்வ தேசீய உணர்வுகளையெல்லாங் கடந்த நிலையிற் பிரம்மத்தை நாடி அடைய முயன்ற ஆன்மஞானியாகவும் மலர்ச்சி பெற்ருர். எந்தச் செயலும் பரமேஸ்வரனின் செயலே எனவும், எல்லாம் அவன் தந்தனவே எனவும், அவர் கருதிக் கன்மத்திலே பற்று வையாதும், அதிலே தோயா தும் நிஷ்காமிய கர்மியாய் வாழ்ந்து வந்தார்.

அவரின் வாழ்க்கையை நோக்கும்பொழுது, சீதா பிராட்டியின் தந்தையாகிய சனக மகாராசாவின நினைவே உண்டாகும். அரசியற் பாரங்களைச் சுமந்துகொண்டு அதே வேளையிலே பிரம்ம ஞானத்திலுந் தலைநின்று, உலக வாழ்விலே தாமரையிலைத் தண்ணீர்த் துளியாகக் காட்சி தந்தவர் சனகர். இராமநாதன் அவர்களை ஈழத்துச் சனகர் என்று கூறின் அது மிகையாகாது.

நியாயவாதித் தொழில் ஒருபுறம், சட்ட நிருபண சபைக் கருமங்கள் மறுபுறம், சமூகப் பணிகள் இன்ஞெரு புறம், நூலாக்கம் மற்றெருபுறம் எனத் தமது நீண்ட வாழ்வு முழுவதும் இடைவிடாது பன்முகப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டபொழுதும் பிரமமத்தை ஆசிர யிக்கும் செயலிலும் அவர் தலைப்பட்டு நின்றதை நோக் குகையில் 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட் டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்ற இலக்கணத்தற்கு இராமநாதன் இலக்கியமாய் விளங்கி ஞர் என்றே கொள்ளல்வேண்டும். ஜீவன் முத்தர்களின் இயல்பினை விளக்கும்பொழுது உமாபதி சிவாசாரியார்,

'கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக'

என்றுரைப்பர்.

இராமநாதனின் வாழ்வுக்கும் இவ்வுண்மை பொருந்து வதே. தம்மைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களின் இன்னல்

களைக் களைவதொன்றே நோக்கமாய்க் கொண்டு அவர் அல்லும் பகலும் உழைத்தாரேயன்றி, அவரின் வாழ்விலே எல்லாவகையிலும் நிறைவே இருந்தது; அந்த நிறைவின் ஊடும் பாவுமாகப் பற்றற்ற, சாந்தம் நிறைந்த அமைதி நிலவிற்று.

எமது காலத்திலே அரசியலிலே ஆன்மிகத்தைக் கலந்தவர் மகாத்மாகாந்தி என்பது வரலாறு கூறும் செய்தி. ஆனல், அரசியலைப் பற்றிய தெளிவான கருத்து நிலவாத சென்ற நூற்ருண்டின் இறுதியிலேயே, ஆன்மிகத்தை அரசியலிற் புகுத்திய முன்னேடி என இராமநாதனைக் கொள்ளலாம்.

இராமநாதனின் வரலாற்ருசிரியரான வைத்திலிங்கம் இதுபற்றிக் கூறுவதாவது: "அரசியலை ஆன்மிகமயப் படுத்திய ஒருவர் இராமநாதனுக்கு முன்னும் இருந்ததில்லை. பின்னும் இருக்கப் போவதில்லை." இக்கூற்று ஓரளவு மிகைப்படுத்தியது போலத் தோன்றினும், ஈழத்துத் தலைவர்களுள்ளே அரசியலில் ஆன்மிகத்தைக் கலந்த முன்னேடியும், முதல்வரும் இராமநாதன் என்பதற்கு ஐயம் இல்லை.

புகழையும், இகழையும் ஒன்றுபோற் கருதி மக்கள் பணியே மகேசுரன் பணி எனக் கொண்டு ஏறக்குறைய அரைநூற்ருண்டுக்காலம் தேசசேவையாற்றிய மாபெருந் தேசிய வீரரான இராமநாதனது வாழ்க்கையின் சில கூறுகளை அடுத்து வரும் இயல்களிலே சுருக்கமாகக் காண்போம்.

———

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

*திருக்குறள் — **அறத்துப்பால், மக்கட்பேறு 1.***

## 2. இராமநாதனின் பாரம்பரியம், பிறப்பு, வளர்ப்பு

இலங்கையின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்திலே பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பெருங் குடிமக்கள் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். திருவும், கல்வியும், சீரும் தழைத்த யாழ்ப்பாணச் சிற்றூர்களிலே மானிப்பாயும் ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தைத் தமிழரசர் ஆண்ட காலத்திலே, அவர்களின் நிருவாகத்திற் 'கணக்கர்' என்ற உயர் பதவியை வகித்தவர் மாணமுதலியார் என்பவர். இப் பதவி பல தலைமுறைகளாய் இவரின் முன்னோராலும், பின்வந்தோராலும் வகிக்கப்பட்டு வந்தது. இதனால் இக்குடும்பத்தினருக்கு நாட்டிலே நன்மதிப்பு ஏற்பட்டிருந்தது.

புகழ்பூத்த இப்பரம்பரையின் வழிவந்த வைரவநாத முதலியார், ஒல்லாந்தரின் அரசில் வணிகப்பகுதிக்கு அதிபதியாய் விளங்கிய எதிர்மன்னசிங்கமுதலியாரின்

மகளாராகிய தங்கநாச்சன் என்னும் திருவனையாரை மணம்புரிந்தார். இவரின் திருமகளாரான விசாலாட்சியே இராமநாதனின் அன்னை செல்லாச்சியினதும், சேர். முத்துக்குமாரசுவாமியினதும் தாயாவர்.

இராமநாதனின் தாய்வழிப் பாட்டனாரும், பருத்தித்துறையிலே கருடாவில் என்ற ஊரினருமான குமாரசுவாமி முதலியார் தம் தமையனாரான வாரித்தம்பியோடு கொழும்பிலே சென்று குடியேறித் தம் ஆற்றலாலும், இனிய பண்புகளாலும் அப்பெருநகரிலே பெரும் புகழீட்டினார்; அவர் ஆங்கிலக் கல்வியில் வல்லுநராகி ஆங்கில அரசின் மொழிபெயர்ப்பாளருமானார். 1810 ஆம் ஆண்டிலே தமது இருபத்தாறுவது வயதிலே அவர், தேசாதிபதியின் (மகாகனம் தோமஸ் மெயிற்லன்ட் அவர்களின்) பிரதம மொழிபெயர்ப்பாளர் என்ற மிக்குயர்ந்த பதவியை வகித்தார். அன்றியும், குமாரசுவாமி முதலியார் 1830 இல், கொழும்பிலுள்ள கிறிஸ்தவரல்லாதாரின் தலைவராயும் நியமனம் பெற்றார். 1835 இல், இலங்கைச் சட்டநிரூபண சபையின் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராய் அமரக்கூடிய வாய்ப்பிருந்தும், அவரின் அகால மரணம் விதியை வேறு விதமாய்த் திருப்பிவிட்டது.

முன்னையோரின் சிறப்புக்கள் இவ்வாறாக, இராமநாதனின் தந்தையாரான பொன்னம்பலமுதலியார், தமது சொந்த முயற்சியால் முன்னேறிய பெரியாராவர். இவரின் தந்தையார் அருணாசலம் என்பவர். தாயார் தங்கம் என்ற நற்குணச் செல்வி. பொன்னம்பல முதலியார் சிறுவயதிலேயே தம் தந்தையாரை இழந்து, தம் ஏழு வயதிலேயே கொழும்பு சென்றார்; அங்கு மாமனாரான குமாரசுவாமி முதலியாரின் அரவணைப்பிலே வளர்ந்து தமிழ், ஆங்கிலக் கல்வியைச் சிறிது பெற்றார்.

குமாரசுவாமி முதலியாரின் உதவி பெற்று அவர் குடியேற்றக் காரியதரிசியின் அலுவலகத்திலே சிறுபணி ஒன்றினை மேற்கொண்டு, படிப்படியாய் முன்னேறிக் கச்

சேரிப் பொருளாளர் பதவி வரை உயர்ந்தமை வியத் தகு வரலாறாகும். எனினும் அக்காலத்திலிருந்த சூழ் நிலை காரணமாக அவர் மேலும் உயர்வு பெறமுடியாது, ஓய்வு பெறுங் காலத்திற்கு முன்னரே ஓய்வு பெற்றார்; பின்னர் இறப்பர் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டுப் பெருவணிகரானார். எனினும் நேர்மையுள்ளமும் வர்த் தக அநுபவமின்மையும் அவரை நட்டத்திற்குள்ளாக்கின.

குமாரசுவாமி முதலியாரின் ஏகபுத்திரியாகிய செல் லாச்சியை — தம் சொந்த மைத்துனியை — விவாகம் செய்த அவர் இல்வாழ்விலீடுபட்டு மூன்று குழந்தை களுக்குத் தந்தையானார். இவர்களுள் மூத்தவர் குமார சுவாமி; இரண்டாமவர் இராமநாதன்; கடைக்குட்டி அருணாசலம்.

பொன்னம்பல முதலியாரின் இல்வாழ்வின்பமும் நெடுநாள் நீடிக்கவில்லை. அவரின் மனைவியார் தமது பத்தொன்பதாம் வயதிலேயே இகவாழ்வினை நீத்து இறையடி சேர்ந்தமை முதலியாரின் வாழ்விலே பேரிடி யாய் வீழ்ந்து நலித்தது.

இதன் பின்னர்ப் பொன்னம்பல முதலியார், துறவி போன்றே தம் வாழ்நாள்களைக் கழித்து வந்தார். முன் னரே இறை நாட்டம் மிக்கிருந்த அவரின் உள்ளம், முற்றாக இறை பணிக்கே தன்னை அர்ப்பணித்தது. கொழும்பு வாழ் சைவமக்களின் வழிபாட்டிற்கெனச் சிவா லயம் ஒன்றினை அமைப்பதிலே அவர் கருத்தூன்றினர்.

தாயைச் சிறுவயதிலேயே இழந்த தனயர் மூவரதும் இளமைப் பருவம், அவர்களின் பாட்டியாராகிய விசா லாட்சியின் மேற்பார்வையிலே கழிந்தது. விசாலாட்சி யார் முருக பத்தி மிக்கவர். இளவயதிலேயே விதவை யான அவர் தன்னம்பிக்கையும், அஞ்சாமையும் வாய்க்கப் பெற்றவராய்த் தம் பேரக் குழந்தைகளைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வந்தார்.

இவ்வாறு பேரன்பும், பெருந்திருவும் நிறைந்த இன்பச் சூழலிலே மக்கள் மூவரும் வளர்ந்து வரலாயினர். இம் மக்களுள்ளே இராமநாதனின் பிறப்புப் பற்றிய அற்புத வரலாறு பின்வருவது:

1850 ஆம் ஆண்டிலே மே மாதத்திலே ஒரு நாள், பொன்னம்பல முதலியார் தமது தென்னிந்திய தலயாத்திரையின் இறுதி நிலையில், இராமேசுவரத்தைத் தம் குடும்பத்தாரோடு வந்தடைந்தார். இராமேசுவரத்தில் எழுந்தருளிய தயாபரனாகிய இராமேசுரனை நோக்கி, அவர் பின்வருமாறு வேண்டினார். "ஐயனே! எல்லா வகை நலன்களும் அமைந்த புதல்வன் ஒருவனை நீர் எனக்குத் தந்தருளல் வேண்டும். தேவரீர் அடியேனுக்கு அவ்வாறு அருள் பாலித்தால் அப்புதல்வனுக்குத் தேவரீரின் திருநாமத்தையே இடுவேன்."

பொன்னம்பல முதலியாருக்கு இராமேசுரன் அருள் கிட்டிற்று. அதன் பயனாக 1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆந் தேதி இராமநாதன் பிறந்தார். இந்நிகழ்ச்சி பொன்னம்பல முதலியாருக்குப் பெருமகிழ்வினை ஊட்டியிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

இராமநாதனதும் அவர் உடன்பிறந்தார் இருவரதும் இளமைப் பருவம் அவர்களின் பாட்டியாரோடு கழிந்ததாயினும், அவர்களுக்குத் தக்க கல்விப் பருவம் வந்ததும் அவர்களைத் தந்தையார் தம்மோடு வாழ அழைத்துக் கொண்டார். அதுவும் நன்மையேயாயிற்று.

பொன்னம்பல முதலியார் தமது வீட்டிலேயே வழிபாட்டிடம் ஒன்றினை அமைத்துத் தமது பெரும் பொழுதை இறை வணக்கத்திலே கழித்து வந்தார். சூழவர மலர்ச்சோலை அமைந்து, தெய்வச் சூழலில் விளங்கிய அந்த வழிபாட்டிடத்தை நாடிச் சென்று, சிறுவராகிய இராமநாதனும் தமது ஓய்வு நேரங்களைச் செலவிட்டார். தம் போன்ற சிறுவர்களையும், சிறு பருவ விளையாட்டுக்களையும் நாடிச் செல்லாது, தந்தையார் பாடு

கின்ற தேவார திருவாசகங்களில் ஈடுபடுந் தன்மையின ராய் அவர் விளங்கி வந்தார். தந்தையாரை நாடிவரும் சமயப் பெரியார்களின் கருத்துரைகளிலும், உபதேசங் களிலும் அவற்றின் பொருள் விளங்காத நிலையிலுங்கூட ஈடுபாடுகொண்ட அந்தச் சிறுவரின் எதிர்காலச் சமய வாழ்விற்கு அப்பொழுதே வித்திடப்பட்டதெனலாம்.

பொன்னம்பல முதலியாரின் இல்லம், வருவோர்க் கெல்லாம் உண்டியளிக்கும் சத்திரம் போன்று விளங்கி வந்தது. முதலியார் விருந்தினருக்குப் பணியாளர் உண வளிக்கும்போது தாமும் நேரில் வந்து நின்று உப சரணைகள் புரிவது வழக்கம். இத்தகைய தண்ணளி நிறைந்த பெருங்கொடை வாழ்வு, இராமநாதனுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கியதில் வியப்பில்லை.

தருமவானும் புண்ணியவானுமாகிய பொன்னம்பல முதலியார் பிற்பகல் வேளைகளிலே பொன்னம்பலவாணே சர் கோயிற்றிருப்பணிகளை மேற்பார்வையிடச் செல்லும் பொழுது, இராமநாதனும் கூடச் சென்று திரும்புவா ராம். அவர்கள் செல்லும் பொழுதும், திரும்பி வரும் பொழுதும் வழிச் செல்வாரெல்லாம் "பொன்னம்பல முதலியார் வருகிறார்" என்று அவருக்கு மதிப்பும், வணக்கமும் செலுத்தியமை இராமநாதனின் இளம் உள் ளத்தில் நன்கு பதிந்து, அவரையும் உயர்நிலைக்கு ஏற்றி வைத்தது. பொன்னம்பல முதலியார் தம் புதல்வர் களிலே மிகுந்த அன்பு கொண்டிருந்ததோடு, அவர் களை நன்முறையிலே வளர்த்தும் வந்தார், "ஐந்து வயது வரை பிள்ளைகள் அவர்களின் பெற்றோருக்கு இராசாக் கள் போன்றவர்கள்; ஆறு வயதிலிருந்து பதினாறு வயது வரை அடிமைகள் போன்றவர்கள்; பதினெழு வயதி லிருந்து நண்பர்கள் ஆவர்" என்று தம் தந்தையார் சொல்லியதாக இராமநாதன் ஓரிடத்திலே குறிப்பிட் டுள்ளார். இத்தகைய வளர்ப்பு முறையால் இராமநாதன் சுதந்திர உணர்வும், நற்பண்புகளும், பொறுப்புணர்ச்சி யும் பெறுதல் இயல்வதாயிற்று.

இராமநாதனும் அவரின் சகோதரர்களும் உரிய வயதிலே அக்காலத்தில் 'இராணி கலைக்கழகம்' என அழைக்கப்பட்ட இன்றைய றோயல் கல்லூரியிலே கல்வி கற்பதற்காய்ச் சேர்க்கப்பட்டனர். இங்குக் கல்வி கற்ற காலத்திலே இராமநாதன், அசாதாரண திறமை எதனையும் வெளிப்படுத்தவில்லை. தம்பியாரான அருணாசலத்தின் கல்விச் சாதனையோடு ஒப்பிடும்போது அவர் சாதாரண மாணவராகவே திகழ்ந்தார் எனலாம். எனினும் வகுப்பறைப் பாடங்களோடு நில்லாது பல நூல்களையும் வாசிக்கும் பழக்கம் அவருக்கு இருந்தது. சிறப்பாக நவீனங்களை வாசிப்பதில் இராமநாதன் மிகுந்த ஆர்வங் காட்டியதாக அவரின் சமகால மாணவரும், பிற்காலத்திலே சிறந்த நியாயவாதியாகவும், கல்விமானாகவும் திகழ்ந்தவருமான கலாநிதி, ஐசாக். தம்பையா குறிப்பிட்டுள்ளார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

திருக்குறள் — பொருட்பால், கல்வி 1.

# 3. இராமநாதன் கற்ற கல்வியும் கல்வி வழிகாட்டிகளும்

"பிள்ளைகளே! தூர இடம் ஒன்றிற்குச் செல்வதற்காய் நீங்கள் இன்று வீட்டை வீட்டுப் புறப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் நன்ருகக் கற்று நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றினுல் உங்கள் சமூகத்திற்கே நல்ல அணிகளாய் விளங்குவீர்கள். எங்கள் நாட்டிற்கும் நற்பணியாற்றுவீர்கள். ஆனுல், நீங்கள் சோம்பித் திரிந்து, கீழ் மக்களுடன் பழகினுல், நான் உங்களுக்கு இப்பொழுது தந்திருக்கும் நல்வாய்ப்பினை இழந்துவிடுவீர்கள். அது மிகப் பெரிய வெட்கத்திற்குரிய செயலாகும். இந்தப் பையிலே ஆயிரம் ரூபா இருக்கிறது. இதை நீங்கள் கவனமாய்ச் செலவழித்தல் வேண்டும்."

புத்திர பாசத்தாற் கனிந்து, நீர் வாருங் கண்களோடு தம் புதல்வர்களாகிய குமாரசுவாமியையும், இராமநாதனையும் முத்தமிட்டு, சென்னைக்குச் செல்லக் கப்பலேற்றிப் பிரியாவிடை கொண்ட பொன்னம்பல முதலியார் கூறிய இறுதி வார்த்தைகளே இவை. சென்னை

இராசதானிக் கல்லூரியிலே பட்டப் படிப்பை மேற் கொள்ளச் சென்ற இவ்விருவருக்கும் அப்பொழுது வயது முறையே பதினாறும், பதினான்குமாகும். உலக அநுபவமோ, உறவினர் நண்பர் கூட்டமோ இன்றிக் கூண்டுக் கிளிகளாய் வளர்ந்த சிறுவர்கள் இருவர், தமது எதிர்கால நல்வாழ்வை நோக்கி, பரந்த உலகிலே அடியெடுத்து வைத்த அற்புதமான நிகழ்ச்சி இது. இந்த நிகழ்ச்சி இளம் இராமநாதனின உள்ளத்திலே தன்னம்பிக்கையையும், பொறுப்புணர்ச்சியையும் ஆழமாக வேரூன்றி விட்டது. குமாரசுவாமியிலும் இளைஞராய் அவர் இருந்தும், அவரே அன்றிலிருந்து சென்னையிலே வாழ்ந்த காலம்வரை வரவு செலவுகளுக்குக் கணக்கு வைதது வந்தார். இந்தப் பழக்கம அவரது இறுதிக் காலம வரையிலே அவரில் அமைந்து அவரை நல்வழிப் படுத்தியது.

தமிழறிஞரும், நீதிபதியும், பண்டைய நூல்களின் பதிபபாசிரியருமாகிய ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் மேற்பார்வையிலே சகோதரர் இருவரது சென்னை வாசமும், கல்வியும நன்முறையிலே நடந்து வந்தன.

இராமநாதன் சென்னை இராசதானிக் கல்லூரியிற் கல்வி கற்ற காலத்திலே கல்லூரிக் கல்வியிலும், அதிகமாகத் தமது பொது அறிவினை விருத்தி செய்துகொண்டார். ஆங்கில நவீனங்கள் வாசிப்பதிலே அவரின் பெரும்பொழுது கழிந்தது. உடற்பயிற்சி நிலையம் ஒன்றிலே உறுப்பினராகித் தம் உடலை வலிவும், வனப்பும் பொருந்தியதாய் அவர் ஆக்கிக்கொண்டார்.

சென்னை வாழ்க்கையால், அவரின் ஆன்மிக சிந்தனைகளும் நெறிப்படலாயின. தமிழரின் சமய, மொழி, பண்பாட்டு நெறிகளை நன்கு அறிந்துகொள்ளவும், பிற்காலத்தில் அவற்றினை அமெரிக்க மக்களுக்குத் தெளிவுற எடுத்துரைக்கவும் சென்னை வாழ்க்கையே அவருக்குப் பெரிதும் உதவிற்றெனலாம்.

குமாரசுவாமியும், இராமநாதனும் பல்கலைக் கழக இடைநிலைத் தேர்விலே சித்திபெற்றுப் பட்டதாரி வகுப்பிற்கு வந்தபொழுது, பொன்னம்பல முதலியாரின் வாழ்க்கையிலே சில நெருக்கடிகள் ஏற்பட்டன. இதனுற் சகோதரர் இருவரும் தமது பட்டப் படிப்பினை மேற்கொள்ளாமலே கொழும்பு திரும்ப வேண்டியதாயிற்று. இருப்பினும் இவ்விருவரது சூழ்நிலையும், சுற்றமும் இவர்களின் நல்வாழ்விற்கு அந்நிலையிலும் அடிகோலத் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இராமநாதனின் ஆளுமையையும், அறிவாற்றல்களையும் உருவாக்கியவர்களுட் குறிப்பிடத் தகுந்தோர் நால்வராவர். இராணிகலைக் கழகத்தின் அதிபராய் விளங்கிய கலாநிதி பாக்குறெப்ற் போக், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, சேர். முத்துக்குமாரசுவாமி, சேர். ரிச்சாட் மோகன் என்பவர்களே அச்சான்றோர்கள்.

பரந்த கல்வியறிவும், சிறந்த ஆசிரிய அநுபவமும் வாய்க்கப்பெற்ற கலாநிதி பாக்குறெப்ற் போக கல்வி பற்றிய தெளிவான நோக்குக் கொண்டிருந்தார், அவர், தம் மாணவர்களிலே கட்டுப்பாட்டினையும், ஒழுக்கத்தினையும் விடாமுயற்சியினையும் ஏற்படுத்துவதிற் கருத்தூன்றினுர். ஆழமில்லாத வெற்றறிவிலே அவருக்கு நமபிக்கையில்லை. அவரின் கண்காணிபபிலே, இராமநாதனின் ஆரம்பக் கல்வி பலம் வாய்ந்த அடித்தளத்திற் சிறப்புற அமைவதாயிற்று.

ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதற் கலைப் பட்டதாரி; யாழ்ப்பாணத்துச் சிறுப்பிட்டியிலே பிறந்த அவர், வட்டுக்கோட்டைச் செமினரியிலே தமது ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பினனர் சென்னையிலே பட்டப் படிப்புப் பெற்றதோடு, நியாயவாதிப் பரீட்சையிலுந் தேறியவர்; சில காலம திருவனந்தபுரத்து உயர் நீதிபதியாகவும் கடமையாற்றினுர்.

தாமோதரம்பிள்ளை ஆங்கிலக் கல்வி பெற்றவராயினும் சிறந்த தமிழ்ப் புலமையும், தமிழார்வமும் வாய்க்

கப் பெற்றிருந்தார். தொல்காப்பியத்தையும், வீரசோழியத்தையும், இலக்கண விளக்கத்தையும், கலித்தொகையையும் அரிதின் முயன்று பெற்று, ஆராய்ந்து பதிப்பித்த தமிழ்த் தொண்டர் அவர். அவரின் ஆளுமையுந் தமிழார்வமும், இளம் இராமநாதனின் முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாயின. ஆங்கிலச் சூழலிலே திளைத்த இராமநாதன் வடமொழியிலும், தென்றமிழிலுங் கருத் தூன்றவும், பிற்காலத்திலே தாய்மொழிக் கல்வியின் தேவையை இந்நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கவும், தாமோதரம்பிள்ளையின் அறிவுரைகளும், ஊக்குவிப்பும் பெருந்துணை புரிந்தன.

சேர். முத்துக்குமாரசுவாமி, இரமநாதனின் தாய் மாமன்; குமாரசுவாமி முதலியாரின் மகன். இளமையிலேயே பெருங் கல்விமானும், விவேகியாயும், பன்மொழிப் புலவராயும் விளங்கியவர். குடியேற்ற நாட்டமைச்சராய் இருந்த டேபி பிரபுவின் மகனாகிய ஸ்டான்லி பிரபு இலங்கைக்கு வருகை புரிந்தபொழுது, முத்துக்குமாரசுவாமி ஆற்றிய வரவேற்புரை மிகச் சிறந்த ஒன்றாகும். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டே யாகும்.

முத்துக்குமாரசுவாமியின் பேச்சுத் திறனைக் கேட்டு மகிழ்ந்த அந்நாளைய தேசாதிபதி, அவரை இலங்கை நாட்டாட்சிச் சேவைப் பயிற்சியாளராய் நியமித்தார். அப்பதவியிலிருந்து மிக விரைவில் முன்னேறிய முத்துக்குமாரசுவாமி பொலிஸ் நீதிபதியாய் மிக இளமையிலேயே நியமனம் பெற்றார். அவரின் இளமை காரணமாக அவரை 'நீதிபதிப் பையன்' என்றே பலரும் அழைத்தனர்.

எனினும், அறிவார்வம் மிக்க முத்துக்குமாரசுவாமி, தாம் மேற்கல்வி கற்று, நியாயவாதியாய் வர (பரிஸ்டராக) விரும்பித் தம் பதவியைத் துறந்து, இங்கிலாந்து சென்றார். அக்காலத்திலே கிறிஸ்தவரல்லா

தாரும், யூதரும் நியாயவாதிப் பயிற்சி பெறுதல் இயலாத ஒரு செயலாயிருந்தது. எனினும், தமது உயர் குடிப் பிறப்பாலும், ஊக்கத்தாலும், அந்த விதியினை மாற்றுவித்து, ஆசியாவின் முதலாவது 'பரிஸ்டரா'கும் பெருமையையும் அவர் பெற்றுச் சிறந்தார்.

அவரின் பெருமிதத் தோற்றமும், பயிற்சிப் பண்பும், பல்கலையறிவும் ஆங்கில நாட்டுச் சான்றோர்களையெல்லாம் கவர்ந்தன. இங்கிலாந்துப் பிரதமர் கிளாஸ்டன் போன்றோரின் நட்பும் அவருக்குக் கிட்டிற்று. விக்டோரியா மகாராணியாரின் முன்பு, தாமே மொழிபெயர்த்து நாடகமாக்கிய அரிச்சந்திரன் நாடகத்தில், தாமே அரிச்சந்திரனாகவும் நடித்து, மகாராணியாரின் அன்புக்குப் பாத்திரரானார்.

இலங்கை திரும்பிய சில ஆண்டுகளில், இலங்கைச் சட்ட நிரூபண சபையிலே தமிழ் மக்களின் முதலாவது, உத்தியோகப்பற்றற்ற, பிரதிநிதியாக அவர் தெரியப்பட்டார். மக்களின் தேவைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் ஆட்சியாளர்க்கு நாவன்மையோடு எடுத்துரைத்து நற்புகழ் பெற்ற அன்னாருக்கு ஆங்கில அரசியலார் 'சேர்' பட்டம் அளித்துக் கௌரவித்தமை வியப்பில்லை.

இத்தகைய சான்றோர் இரமநாதனின் அரசியல், சமூக, அறிவியல் வாழ்க்கைக்கு ஒரு கலங்கரை விளக்கமாய் விளங்கியது, இராமநாதனின் தவப்பேறேயாகும். 'சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்க்கை' என்ற ஆங்கில நூலை எழுதிய, திரு. எம். வைத்திலிங்கம் பின்வருமாறு ஓரிடத்திலே குறிப்பது முற்றிலும் பொருந்துவதே. "அவரது (இராமநாதனது) சமய வாழ்விலும், வள்ளன்மைப் பண்பிலும் அவர் தந்தையும்; பொது வாழ்விலும், வீரத் திறலிலும் அவர் மாமனாராகிய சேர். முத்துக்குமாரசுவாமியும் உண்மையிலேயே தமது ஆக்கபூர்வமானதும் பூரணமானதுமான செல்வாக்கினை ஏற்படுத்திவிட்டனர்."

சேர். முத்துக்குமாரசுவாமியவர்களின் உறுதுணையால், இராமநாதன் அக்காலத்திலே தலைசிறந்து விளங்கிய, நியாயவாதிகள் நாயகமாகிய சேர் ரிச்சாட் மோகன் அவர்களின் கீழ் நியாயவாதிப் பயிற்சி பெற அமர்ந்ததும், அவர் வாழ்வின் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியேயாகும்.

அக்காலத்திலே சட்டக் கல்லூரி இருந்ததில்லை. முதிர்ந்த நியாயவாதி ஒருவரின் கீழ் மூன்றாண்டுகள் பயிற்சி பெற்றபின் நீதியரசர் முதலானோரால் நடாத்தப்பட்ட நியாயவாதிப் பரீட்சைக்குத் தோற்றி, அதில், தேர்ச்சி பெற்றவரே நியாயவாதித் தொழில் நடத்தும் தகுதியை அடைந்தார்.

சட்டப் பயிற்சி பெற இராமநாதனுக்குக் கிடைத்த ஆசிரியர், அத்துறையிலே பேரறிவு படைத்தவராய் விளங்கினார். அவரின் சிறப்பியல்புகள் பற்றி இராமநாதனே ஓரிடத்திலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "பழகுதற்கு இனியவரும், இலங்கையிலேயே மிகச் சிறந்த பண்பினராய் விளங்கியவருமான சேர். ரிச்சாட் மோகன் அவர்களின் கீழ், சட்ட மாணவனாய் அமர்ந்தது எனது நல்லூழேயாகும். நீதித்துறையினன் ஒருவன் அறிந்திருக்கவேண்டிய சட்டக் கோட்பாடுகளைக் கற்பித்தலோடு அவர் நின்றாரல்லர். அவர் எனக்குச் சாதாரண சட்ட அறிவுகளை மாத்திரம் அளியாது, நீதித் தொடர்பான ஞானங்களையும் அறிவுறுத்தினார்".

நீதிக்காக அஞ்சாது போராடவும், ஆய்ந்தமைந்தடங்கிய கொள்கைச் சான்றோராய், எந்தச் சூழ்நிலையிலும் நிதானத்தோடு வாதம் புரியவும், சேர். ரிச்சாட் மோகன், இராமநாதனைப் பயிற்றிவிட்டனர் என்பதே சாலும். பட்டப் படிப்பினைப் பாதியிலே நிறுத்திய இராமநாதன் சட்டப் படிப்பிலே இணையற்று விளங்க இப் பறங்கிப் பெருமகனே வழி காட்டினார் என்பதுங் குறிப்பிடத்தக்கது.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

திருக்குறள் — அறத்துப்பால், நடுவு நிலைமை 8.

## 4. இராமநாதன் - நியாயவாதி, சட்டநிரூபணசபை உறுப்பினர்.

இராமநாதன் தமது அயரா உழைப்பாலுந் திறமையாலும் மூன்ருண்டுக் கால நியாயவாதிப் பயிற்சியை ஈராண்டுகளிற் பூர்த்தி செய்து, 1873 ஆம் ஆண்டிலே நியாயவாதியானுர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்திரண்டு. எனினும், அநுபவம் வாய்ந்த நியாயவாதிகளுக்கு நிகராக, அவர் தாம் எடுத்துக் கொண்ட வழக்குகளை நடத்தி, யாவரதும் பாராட்டிற்கு உரியவரானுர்; எவ்வகை வேறுபாடுங் காட்டாது, எல்லா இனத்தவரையும் சமமாகக் கருதி அவர்களின் வழக்குக்களையெல்லாம் வென்றுதந்து புகழ்பெற்ருர். நியாயவாதி என்ற முறையிலே தங்கடமைகளை அச்சமோ, ஒரு தலைச்சார்போ இன்றி ஆற்றினுர். விருப்பு, வெறுப்பற்ற சமநிலையோடும், உறுதியோடும், உழைப்போடும் அவர் விடயங்களை அணுகியதால், பெரும்பாலும் வெற்றியே கிட்டிவந்தது.

சாட்சிகளை உருட்டி மிரட்டும் குறுக்குக்கேள்விகள் அவர் அறியாதவை. எச்சூழலிலும் நிதானந்தவறுது, சட்ட ஆதாரங்களின் பின்னணியில், சிறந்த நாவன்மை யோடு அவர் தம் வாதங்களை நடத்தியதால் நீதிபதி களின் மதிப்பிற்கும், புகழ்ச்சிக்கும் உரியரானுர். சிவில் வழக்குக்களில் அவர் ஈடிணையற்றவராய் விளங்கினுர்.

இவ்வாறு நீதித்துறையிலே இராமநாதன் பெற் றிருந்த பெரும் புகழும், அவரின் குடும்பத்தவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய நற்பணிகளும் சிறப்பாகச் சேர் முத்துக்குமாரசுவாமி இலங்கைச் சட்டநிருபண சபையில் வாதசிங்கமாய் விளங்கியமையும் ஒன்று சேர்ந்து 1879 இல் இராமநாதனை இலங்கைச் சட்டநிருபண சபையில், தமிழர்களின் உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதி யாய் ஆக்கிவைத்தன,

இத்தேர்தலில் இவரோடு போட்டியிட்டவர் இவரின் சகலனுகிய பிறிற்ருே ஆவர். அக்காலத்திலே கொழும் பிலே செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த நன்னித் தம்பி முதலியாரின் மூத்த மகளைப் பிறிற்ருேவும், இளைய மகளை இராமநாதனும் விவாகம் செய்திருந்தனர். எனி னும், தேசப்பணி என்று வரும்பொழுது உறவு முறை களைப் பாராட்டுவதிற் பயனில்லை.' எனவே, இருவரும் தேர்தற் களத்திலே குதித்தனர்.

பிறிற்ருே வயதால் மூத்தவர். பெயர் பெற்ற நியாய வாதி. கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலே கற்றுப் பட்ட தாரியானவர்; கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலாமிடங்களிலே பெயரும், புகழும் சிறக்க நியாய வாதித் தொழில் நடத்தியவர்; பதிற்றுணை இராணி நியாயவாதியாகவும், மாவட்ட நீதிபதியாகவும் கடமை யாற்றியவர்; சட்டநிபுணர்; அரசியல் அறிவும் நிறை யப் பெற்றிருந்தார். இருப்பினும், அவரின் சில நேர்மை யற்ற செயல்களாலும், யாழ்ப்பாணத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அவருக்கு எதிராக நடத்திய தீவிரமான பிரசாரங்களாலும் திரு. கிறிஸ்டோபர்

பிறிற்றே தோல்வியை அரவணைக்க நேர்ந்தது. ஆகவே, 1879 இலே இலங்கை அரசியல் வானிலே ஈடிணையற்ற விடிவெள்ளியொன்று மிகுந்த பிரகாசத்துடன் தோன்றி அடுத்து வந்த அரை நூற்றுண்டுக் காலத்தில் மிகுந்த பிரகாசத்துடன் எந்நிலையிலும் சுடர் குன்றாது ஒளி கான்றது.

இராமநாதன் தமிழருக்குப் பிரதிநிதியாய் மாத்திரம் இருந்துவிடாது, இலங்கையின் தேசீய இனங்கள் யாவினதும் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட வரலாறு இலங்கைச் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களாலே பொறிக்க வேண்டிய ஒன்றாகும். தமிழர், சிங்களர், முஸ்லிங்கள் பறங்கியர் என்ற வேறுபாடு எதுவுமின்றி, எல்லா மக்களுக்கும் நலம் பயக்கும் எண்ணமே தம் உள்ளத்தில் நிலைத்து நிற்கச் சட்டநிரூபணசபையிலே அவர் புரிந்த பணிகளை ஈழத்து மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். இராமநாதனின் பணிகளிலே மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சிலவற்றை மட்டும் நோக்குவோம்.

பௌத்த சமயத்தவர் வெசாக் தினத்தைக் கொண்டாடுவதற்கு உதவியாக அந்நாளைப் பகிரங்க விடுமுறை தினமாக்கத் தீவிரமாய் உழைத்து, சட்டநிரூபண சபையிலே வாதாடி அதில் அவர் வெற்றியும் பெற்றமை அவரின் பரந்த சமய சமரசத்தினையும், தேசீய உணர்வினையும் காட்டுவதாகும்.

அக்காலத்திற் பௌத்த தேவாலயங்களின் சொத்துக்கள், நிருவாகச் சீர்கேட்டினுற் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. அந்நிய ஆட்சியாலும், அரசின் அலட்சியமும், மதக் காழ்ப்பும் நிறைந்த செயல்களினுலும் அந்தச் சொத்துக்கள் பிழையான வழிகளிலே பயன்படுத்தப்பட்டுச் சீர்கேடுற்றன. ஆலய மானியங்கள் அவற்றின் தேவைகளுக்குப் பயன்படாது விரயம் செய்யப்பட்டன. இச்சீர்கேடுகளை நிவிர்த்திக்கச் சேர் ஆதர் கோடன்

(அக்காலத்திலிருந்த தேசாதிபதி) அவர்களின் அனுமதியோடு நியாயவாதிகள் நாயகம் சேர். சாமுவேல் கிரீனர் பௌத்த தேவாலயச் சொத்துக்களின் பாதுகாப்பு மசோதா ஒன்றைச் சட்டநிரூபண சபையிலே சமர்ப்பித்தார். அதனை ஆதரித்து இராமநாதன் ஆற்றிய சொற்பொழிவு மிகவும் சிறந்ததொன்றாகும்.

முஸ்லிங்கள் தமது திருமணங்களைச் சட்டபூர்வமாய்ப் பதிவு செய்தல் வேண்டும் என்ற பிரேரணை சட்டநிரூபணசபையிலே விவாதத்திற்கு வந்தபொழுது, அதனை எதிர்த்து இராமநாதன் வாதாடினார். "முஸ்லிங்களின சகோதர மககளாகிய தமிழ் இந்துக்கள் (இவ்விடயத்தில்) பெருமளவு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கையில், இத்தகைய பெரியதொரு மாற்றத்தினை முஸ்லிங்களின் மீது மாத்திரம் திணிப்பது ஏன என்று எனக்கு விளங்கவில்லை" என்று அவர் ஆட்சியாளர்மீது வன்மையான கேள்விக் கணையை வீசினார். (தேசவழமைச் சட்ட அடிப்படையில் இந்துக்களின் சமயாசாரத் திருமணங்கள் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றிருந்தன.) அவரின் ஆதாரபூர்வமான, ஆற்றல் நிறைந்த சொற்பொழிவின் பயனாக முஸ்லிங்களைப் பதிவுத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தும் சட்டம் நிறைவேறாது போயிற்று.

அக்காலத்தில் மலைநாடுகள், தலைமன்னார் முதலாமிடங்களுக்குப் புகையிரதப் பாதைகள் திறக்கப்பட்டிருந்தன. ஆனால், யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதப் பாதை திறக்கப்படவில்லை. இது அரசினர்க்குப் பணச் செலவினை அளிப்பதனறி, வருவாய் அளிக்காது என ஆட்சியினர் தட்டிக்கழித்தவண்ணமிருந்தனர். இராமநாதனே, "யாழ்ப்பாணப் புகையிரதப் பாதை திறப்பதால் அரசினர்க்குப் பெருமளவு வருவாய் கிடைப்பது உறுதி" என இடைவிடாது வாதாடிப் பலத்த எதிர்ப்புக்களின் மத்தியில், தம் கோரிக்கையை நிறைவேற்றினார். இன்று இலங்கைப் புகையிரதப் பகுதிககு மற்றைப் புகையிரதப் பாதைகளிலும் யாழ்ப்பாணப் புகையிரதப் பாதையே அதிக வருவாய் தருவதை நாம் கண்கூடாகக் கண்டு

வருகின்றோம். இப்பாதையானது யாழ்ப்பாண மக்கள் தலைநகரோடு நேரடித் தொடர்புகொள்ளும் வாய்ப்பினை அளித்து, அவர்களுக்குப் பெரியதொரு வரமாக நிலவி வருகின்றது.

1912 ஆம் ஆண்டு கம்பளை வாழ் சிங்கள மக்கள் தாம் ஆண்டுதோறும் கொண்டாடி வந்த எசலப் பெரகராவினை அவ்வாண்டும் சிறப்புறக் கொண்டாட ஆயத்தம் செய்தனர். எசலப் பெரகரா ஊர்வலம் வழக்கம் போலக் கம்பளையின் எல்லா வீதிகளின் வழியாகவும் சென்று மகாவலி கங்கையை அடைந்து மீண்டும் திரும்புவதாய் ஏற்பாடாயிற்று. ஆனால், இந்தியாவிலிருந்து இலங்கை வந்து தற்காலிகமாய் ஓரீராண்டுகள் வியாபாரம் செய்து தம் தாயகம் திரும்புவதை வழக்கமாய்க் கொண்டிருந்த 'கம்பயர்' என்னும் இனத்தினரான முஸ்லிங்கள் தாம் புதிதாய் அமைத்த பள்ளிவாசல் வீதி வழியாய்ப் பெரஹரா ஊர்வலம் செல்வதைத் தடை செய்தனர். இதற்கு அவர்கள் மத்திய மாகாணாதிபதியிடம் உத்தரவு பெற்றனர். இதனை எதிர்த்துக் கம்பளைப் புத்த விகாரத்தின் பசநாயக்கா நிலாமை கண்டி மாவட்ட நீதமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார். ஊர்வலத் தடைவிதிப்பு, சிங்கள மக்களிடையே பெரும் மனக்கிளர்ச்சியையும், ஆத்திரத்தையும் கிளப்பியதில் வியப்பில்லை. ஏனெனில், இத்தகைய தடையை அவர்கள் இதன் முன்னர் எக்காலத்திலும் கண்டதில்லை. தங்கள் மத சுதந்திரத்திலே அந்நியத் தலையீடு ஏற்படுவதை யார்தாம் விரும்புவர்? 1914 ஆம் ஆண்டில் பசநாயக்கா நிலாமையின் வழக்கு, விசாரணைக்கு வந்தபொழுது சிங்கள மாவட்டங்கள் எங்கும் கிளர்ச்சியின் முன்னறிவிப்பான அதிருப்தி நிலைமையொன்று உருவாகிக்கொண்டிருந்தது.

இந்நிலையில் வழக்கு, பசநாயக்கா நிலாமைக்குச் சார்பாகத் தீர்ப்பாயிற்று. கண்டி மாவட்ட நீதிபதி எசலப் பெரகரா, புத்த சமயாசாரச் சடங்கு என்பதை ஏற்றுக்கொண்டார். வழக்கம் போல முஸ்லிம் பள்ளிவாசல் அமைந்திருந்த அம்பகமுவ வீதி உட்படக் கம்

பளையின் எல்லா வீதிகளிலும் பெரகரா ஊர்வலம் செல்ல அனுமதித்தார்.

ஆயின், நிலைமை இத்துடன் சீரடைவதாயில்லை. கண்டி மாவட்ட நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து மத்திய மாகாணுதிபதியின் சார்பில் நியாயவாதிகள் நாயகம் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கின் தீர்ப்பு வெளியாவதற்கு முன்னர் 27-2-1915 இற் குருநாகலைக்கண்மையிலே நடைபெற்ற ஒரு பெரகரா ஊர்வலத்தைத் தடுத்த தெல்சியகமுவ என்ற கிராமத்து முஸ்லிங்கள் ஊர்வலத்திற் சென்றவர்களைத் தாக்கினர். இதனைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் சிங்கள — முஸ்லிம் இனக் கலவரங்கள் நிகழலாயின. கலவரத்தினைச் சாதகமாய்க் கொண்டு நாட்டின் காடையர்கள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு முதலிய வன் செயல்களில் ஈடுபட்டனர். வடமாகாணந் தவிர்ந்த, மற்றைப் பிரதேசங்களிற் பெரும் அமைதியின்மையும் அச்சமும் நிலவின.

இவற்றை அடக்குவதற்காய் 1915 ஆகஸ்ட் 30 ஆந் தேதி அடக்குமுறைச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் — அடக்குமுறைச் சட்டம் என்ற போர்வையில் — அரசாங்கம் சிங்கள மக்களைப் பல வழிகளிலும் பழிவாங்கிற்று. கேள்விமுறையின்றிப் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சிங்களப் பிரமுகர் பலர் விசாரணையின்றிச் சிறையிலே தள்ளப்பட்டனர். இலங்கையின் முன்னுட் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா, அவரின் தமையனுர் எப். ஆர். சேனநாயக்கா (கொழும்பு மாநகரசபையின் அந்நாள் உறுப்பினர்), பௌத்த பிரம்மஞான சங்கத் தலைவராயிருந்த சாள்ஸ் பத்துவந்து தேவா ஆகியோர் இவ்வாறு சிறைப்பட்டோர்களுட் குறிப்பிடத் தக்கவராவர்.

இராமநாதனுல் இந்த அநீதிகளைச் சகித்துக்கொண்டிருக்க இயலவில்லை. சிங்கள மக்களுக்கும் தலைவர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளைச் சான்றுகளோடு

எடுத்துக்காட்டி, அன்றைய ஆட்சிபீடத்திலிருந்தோரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, சட்டநிருபணசபையில் அவர் ஆற்றிய பிரசங்கங்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றிலே என்றும் மறக்கமுடியாதவை; பொன் எழுத்துக்களிலே பொறிக்கப்பட வேண்டியவை.

இலங்கைத் தேசாதிபதியிடமும், ஆட்சியாளரிடமும் இருந்து நீதி கிடைக்காத நிலையில், தமது முதிய பராயத்தையும் பொருட்படுத்தாது இராமநாதன் கப்பலேறி இங்கிலாந்து சென்றார். முதலாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்த சமயம் அது; ஜேர்மனிய கடற் கண்ணிகளுக்கு ஆங்கிலக் கப்பல்கள் இரையாகிக் கொண்டிருந்த நாட்கள் அவை. எனினும், இராமநாதன் தயங்கினாரல்லர். ஆங்கில மேலிடத்தாட்சியாளருக்கு உண்மைகளை எடுத்து விளம்பி, அவர்களின் கண்களைத் திறந்தார். அதன் பயனாய்ச் சிங்கள மக்களுக்கு நீதி கிடைத்தது.

தேசாதிபதி தம் பதவியினை இழந்து நாடு திரும்ப நேர்ந்தது. இலங்கை மணித்திரு நாட்டிலே மீண்டும், அமைதியும், ஆனந்தமும் நிலவலாயின. நாட்டு மக்கள் — சிறப்பாகச் சிங்கள மக்களும் தலைவர்களும் — இராமநாதனை இதயங் கனிந்த நன்றியோடு வரவேற்றுத் தம் தலைவராய் ஏத்திப் போற்றினர். இராமநாதனின் தேசீயப் பணிகளில் இது முடிமணிபோன்றது என்பதற்கையமில்லை.

ஐம்பத்திரண்டாண்டுச் சட்டநிருபணசபைப் பணியிலே இராமநாதன் தாம் ஓர் அரசியற் சீர்திருத்தவாதி, பரந்த மனப்பான்மை கொண்ட கனவான், தேசீய உணர்வு மிக்க வீரர் என்பவற்றையெல்லாம் நிரூபித்த சந்தர்ப்பங்கள் இன்னும் பல உள்ளன. குறுகிய மனப்பான்மைக்கோ, இன, மத, மொழி வேறுபாட்டுணர்ச்சிக்கோ இடமளிக்காத மிகப் பெரிய மனிதர் என்பதை அவரின் எதிரிகள்கூட ஏற்றுக்கொள்ளுமளவிற்கு அவர் உயர்ந்து விளங்கினார்.

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றை விடற்கு.

*திருக்குறள் — அறத்துப்பால், துறவு 10.*

# 5. இராமநாதனின் ஆத்மஞானம்

நாம் தொடக்கத்திலேயே கூறியதுபோல, இராம நாதன் தம் உள்ளத்தாற் சனகர் போன்றே வாழ்ந்து வந்தார். அவரின் நடை, உடை, பாவனைகளும், வெளித் தோற்றமும், பட்டம் பதவிகளும் அவரை இலௌகிக வாழ்க்கையிலே திளைத்தவர் போலக் காட்டியது உண் மையே. ஆனல், அவர் இவற்றையெல்லாம் கடந்த ஓர் அமைதி நிலையிலேயே எல்லாம் "பரமேசுவரன் செயல்" என்ற உறுதியோடு வாழ்ந்து வந்தார்.

"இருள் நிறைந்த அறையில் அகப்பட்டு, இருளை இருளென்றறியாமல் வழிகெட்டுத் தடுமாறுகின்றவ னுக்கு ஓர் ஒளிக் கிரணம் சுகத்தைக் கொடுக்கும்."

"அதுபோல வஞ்சனை, பொருமை, லோபம், மோகம், மதம் முதலிய விஷ குணங்களால் வாதிக்கப் பட்டு நன்மை எது, என்றறியாமல் மயங்குகிறவனுக்குச் சுகத்தைக் கொடுக்கும் பொருட்டுக் கருணைநிதியாகிய சிவ பெருமான் தமது பேரறிவிலும், பேரன்பிலும் நின்று தோன்றிய ஒரு ஞானரேகையைக் கொடுத்தருளினர்."

"இந்தச் சச்சிதானந்த ரேகை சனுதன தர்மம் என்று கூறப்படும். அதாவது, ஆணவ இருளில் அகப்பட்டிருக்கும் ஆத்மா சதாகாலமும் தரிக்கத்தக்க சிவசக்தி."

"இந்தத் தேவாத்ம சக்தி விதிவிலக்கு ரூபத்தில் நின்று, ஜீவாத்மாவை மலத்தினின்று ஈடேற்றி உத்தாரணம் செய்யும்."

"எவன் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுசரித்தும், விலக்கப்பட்ட கர்மங்களை நிஷேதித்தும் வாழ்வானே, அவனுக்குச் சித்தசுத்தி உண்டாகிப் பேரன்பும், பேரறிவும் தலைப்படும்."

இவை ஆத்திசூடி மந்திர விளக்கம் என்ற இராமநாதனின் நூலிலே காணப்படுபவை. நிஷேதித்தல்—விலக்குதல். இராமநாதன் எந்தத் தருமத்தின் அடிப்படையிலே தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டார் என்பதும், எத்தகைய உள்ள நிலையிலே செயல்புரிந்தார் என்பதும் இதனுல் தெரியவருகின்றன.

இராமநாதனும் அவர் தம்பி அருணுசலமும் செல்வம், புகழ், பதவி ஆகியவற்றின் உச்சத்திலே இருந்தபொழுது அருட்பரானந்த சுவாமிகளாலே கடைக்கணிக்கப்பெற்றனர். அருட்பரானந்த சுவாமிகள் இராமநாதனின் மருகராய்ப் பிற்காலத்தில் உறவு பூண்ட கலாநிதி சு. நடேசபிள்ளையின் பாட்டனுர். போதனையும் சாதனையும் பின்னிப் பிணைந்த பெரும் ஞானவான். இவரின் அடிகளிலே இருந்து சமய உண்மைகளைக் கற்றும், யோகம் பயின்றும் சகோதரர் இருவரும் பரிசுத்தர் ஆயினர்.

அருட்பரானந்த சுவாமிகளைச் சற்குருவாய்ப் பெற்றதன் பின்பு, இராமநாதனின் வாழ்க்கையின் நோக்கும், போக்கும் புதுவழியிலே திரும்பிவிட்டன. உள்ளத்தால் மட்டும் அன்றி, வாழ்வாலும் எளிமையாய் இருப்பது என்று தீர்மானித்தவர் போல, அவர் வாழலானுர். இங்கிலாந்தில் இருந்த எட்வேட் காப்பென்றர் என்ற ஆங்கில



அறிஞர்க்குத் தம் தமையனரின் புதிய போக்குப் பற்றி அருணசலம் பின்வருமாறு எழுதியுள்ளார். "நீங்கள் என் தமயனுரைச் சில ஆண்டுகளின் முன்பு இங்கிலாந்திலே சந்தித்தீர்கள். இவரை இன்று கண்டீர்களானல், இவரில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினை நீங்கள் நன்கு அவதானித்தல் இயலும். எத்தகைய ஆன்மிக ஞானநிலையினை அவர் அடைந்துள்ளார்! மிக அமைதியாகவும், விவேகமாகவும், உண்மையாகவும், எவற்ருலும் அசைக்க முடியாத வீரததோடும், அஞ்சாமையோடும், எதிலும் பற்றற்ற தன்மையோடும், அனுதாபத்தோடும், அன்போடும் அவர் விளங்குகின்ருர். அவர்தம் உள்ளத்தின் சாந்தமும், அமைதியும் அவரின் முகத்திலே தெய்விகக் கவர்சசியினை ஆககி உள்ளன."

பலதரப்பட்ட பணிகளுக்கிடையேயும், இராமநாதன் தமது ஆனம விதழையைப புறக்கணித்தவர் அல்லர். இரவின பெருமபகுதியை நூலகளே வாசிப்பதிலும், சட்ட நிரு மணசபைப பேச்சுககளே ஆயததம் செய்வதிலும் செலவழிதத அவா, எஞசிய பொழுதுகளே யோக சாதனேயிலும, ஞானநூலகளே ஓதி உணாவதிலும், இறை வழிபாட்டிலும கழிதது வநதாா.

அவரின ஆனம ஞானம் கடல் கடந்து அமெரிக்கா வரை சென்று பரவிப பலரையும் அவரை நாடிவரச் செய்தது. ஆனம தாகமும கீழததிசைத தத்துவங்களில் ஆழந்த அறிவும பெறற மைரன எச் ஃபெல்பஸ் என்ற அமெரிகக நியாயவாதி இலங்கை வந்து ஓராண்டிற்கு மேல் அவரின சீடராய அமாந்து, சமய தததுவ விசாரத்திலீடுபட்டார்.

அன்றியும் அவர் ச ய ஒப்பிட்டாராய்ச்சியிலும் பெரிதும் ஈடுபட்டு வந்தார். கிறிஸ்தவ ஞானிகளான பரி. யோவான், பரி. மத்தே ஆகியோர் சுவிசேஷங்களின் ஊடாக யேசு கிறிஸ் துநாதரின் உபதேசங்கட்கு அளித்த விளக்கத்தில் ஆராய்ந்து, 'அவை பற்றிய

கீழைத் தேசக் கண்ணேட்டம்' என்ற வியாக்கியான நூல்கள் இரண்டினை அவர் எழுதியுள்ளார். இந் நூலிலே அவர் தமக்கு இட்டுள்ள பெயர் ஸ்ரீ பரானந்தா என்பதாகும்.

இராமநாதனின் ஞானத்திறம் அவரின் சுவிசேஷ வியாக்கியான நூல்களாலும் மைரன். டி. ஃபெல்ப்ஸ் என்ற சீடராலும் அமெரிக்காவரை சென்று பரந்தன. இதனுல் அமெரிக்க மக்களில் ஞானதாகம் கொண்டிருந் தோர், அவரைத் தங்கள் நாட்டிற்கு வந்து ஞானப் பேருரைகள் வழங்குமாறு வருந்தியழைத்தனர். அவ் வேளையில் இராணியின சட்ட அதிகாரி என்ற உயர் பதவியை அவர் வகித்துக்கொண்டிருந்தார். எனினும், தேசாதிபதியே விரும்பி அளித்த ஓராண்டு ஈவில், அவர் அமெரிக்கா சென்று கிரீன்ஏக்கர், பொஸ்ரன், நியூயோர்க், வாஷிங்டன், முதலாம் பெருநகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களிலும், கலை, சமய மனறங்களிலும், தேவாலயங் களிலும், சைவ நன்னெறியின சிறப்புக்களையும், இந்திய ஆனம வித்தையினையும் பலபட விரித்துரைத்து, அமெ ரிக்கரின் ஞானக் கண்களைத் திறந்தார். சுவாமி விவேகா னந்தரின் வீரமுழக்கத்தினைத் தொடர்ந்து, இராமநாத னின் மென்மையும ஆழமும், பெருமிதமும் கலந்த நல் லுரைகள் அவர்களின் செவிகளுக்கும், கருத்துக்களுக்கும் விருந்தாயின என்பது அக்கால அமெரிகக, இலங்கைப் பததிரிகைகளிலே வெளியான பாராட்டுரைகளிலிருந்து நன்கு தெரிகின்றன. அமெரிக்காவில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் 'மேற்கு நாடுகளிடையே காணப் படும ஆனமிகப் பண்பு' என்ற ஆங்கில நூலாய் வெளிவந்துள்ளன.

இத்தகைய அரிய சமய அனுபவ அறிவுரைகளை நிகழ்த்தக்கூடிய பரிபக்குவநிலை படிப்படியாய் அவரிலே ஏற்பட்டு வந்தமை இலங்கையின் பெருமக்கள் அவருக்கு அளித்த பிரியாவிடையின்போது அவர் ஆற்றிய சொற்

பொழிவில் இருந்து நன்கு தெரிகிறது. அவர் சொன்னர்; "நியாயவாதத்துறையிலும், சட்டசபையிலும் நான் ஆற்றிய பணிகளிலும் மேலான ஒரு பணியினை ஆற்றல் வேண்டும் என்ற உணர்வினை நான் உணர்ந்தேன் என்று மாத்திரம் இப்பொழுது என்னல் கூறமுடிகின்றது. அப்பெரும் பணியினை நான் தெரிந்துகொண்ட வேளையில், இதுநாள் வரை என்னுடைய காலம் எல்லாம் நீதிமன்றங்களிலும், அரசியல் அரங்கிலும் வீணுய்க் கழிந்துவிட்டன என நான் உணர்ந்தேன்."

அமெரிக்காவினின்று திரும்பியதும், இராமநாதன் சட்ட அதிகாரிப் பதவியில் இருந்து விலகிக்கொண்டார். அடுத்து, தம் தந்தையார் கட்டிய பொன்னம்பலவாணேசர் கோயிலைப் புனர்நிர்மாணம் செய்து, கருங்கல் திருப்பணியாய் அமைப்பதிலே அவர் ஈடுபட்டார். இத்திருப்பணி சாதாரணர் நினைத்துப் பார்க்கவும் முடியாத தொன்று. இராமநாதனின் தம்பியாராகிய அருணசலமே இந்த முயற்சி சாத்தியமற்றது என்று கருதினர். "உன் தகப்பனர் ஒரு பைத்தியகாரன். மிகப் பெரிய பைத்தியகாரன்! தென் இந்தியப் பெருங் கோயில்கள், பேரரச பரம்பரையினரால் எத்தனையோ தலைமுறைகளாய் முயன்று கட்டிமுடித்தவையாகும். இவற்றைப்போன்று தனி மனிதர் ஒருவர் பெருங் கோயில் ஒன்றை எழுப்புவது சாத்தியமாகுமா? தன்னறிவுடைய எந்த மனிதனும் இதனைத் துணியான்" என்று அவர், இராமநாதனின் மகனுகிய வாமதேவனுக்கு எடுத்து உரைத்தார். அதனைக் கேள்வியுற்ற இராமநாதன் தம் மகனுக்குக் கூறியதாவது: "மதுரை மீனுட்சி அம்மன் கோயில் போன்ற பெருங் கோயில்கள் ஓர் ஆண்டிலோ, ஒரு மனிதனுலோ கட்டப்பட்டனவல்ல. பாண்டியப் பெருவேந்தன் ஒருவன் தொடங்கி வைக்க, அவன் வழிவந்த பிற பாண்டியரும், நாயக்க மன்னரும் அதனை நிறைவேற்றினர். மகனே! நான் இதனைத் தொடங்குகின்றேன், நீயும் உன் பரம்பரையும் இதனைக் கட்டி முடிப்பீர்கள்."

இ. 5

இவ்வாறு இராமநாதன் எடுத்துரைத்தாலும், அவர் தமது காலத்திலேயே இம் மாபெரும் சிவப்பணியினைத் தனி மனிதராய் நின்று நிறைவு செய்தார். இவ்வாலயத்தின் திராவிடப் பண்பையும், கட்டடச் சிற்பச் சிறப்புக்களையும் கலை வல்லுனர் பலரும் மிகவும் போற்றியுள்ளனர். கலைப்புலவர் க. நவரத்தினம் தமது இலங்கையின் சிற்ப வரலாற்று நூலிலே இவ்வாலயத்தின் அமைப்பு முறைச் சிறப்பினைப் பலபடப் புகழ்ந்துள்ளார்.

இலங்கைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியரான கலாநிதி கா. இந்திரபாலா குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது. "இப்படியாக நாயக்கர் காலத்திலே வளர்க்கப்பட்ட திராவிடக் கட்டிடக் கலையே அதிக மாற்றமின்றி இன்றும் தென் இந்தியாவிலே பேணப்பட்டு வருகிறது. இக்கட்டிடப் பாணியின் செல்வாக்கு, முற்பட்ட பாணிகளின் செல்வாக்கைப் போல இலங்கைக்கும் பரவியது. இதனால் பிரித்தானிய ஆட்சிக் காலத்தின்போதும், அதற்குச் சிறிது முன்பாகவும் இந்தப் பாணியிலே சில கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் கண்டியிலே கட்டப்பட்ட பிள்ளையார் கோயில், கொழும்பு கொச்சிக்கடையிலே கட்டப்பட்ட பொன்னம்பலவாணேசுவரர் கோயில், யாழ்ப்பாணத்துப் பரமேஸ்வரக் கல்லூரியிலே காணப்படும் இராமநாதேஸ்வரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை." (இலங்கையின் திராவிடக் கட்டடிக் கலை. பக்கம் 55, 56.)

இராமநாதன் பிரித்தானிய அரசாங்கத்திடம் இருந்து C. M. G., K. C., Sir. முதலான மிக்குயர்ந்த பட்டங்களையெல்லாம் பெற்றவர், சிறந்த தேசீய வீரர், இணையற்ற நியாயவாதி. எனினும், இவை யாவிற்கும் மேலாக இவரின் ஆத்மஞானமும், சமயப் பணியும், கல்விப் பணியுமே நிலைபேறு அடைந்து விளங்குகின்றன. பொன்னம்பலவாணேசர் கோயில் உள்ளவரை, இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரி என்பன உள்ளவரை அவரின் பெயர் ஈழமணித் திருநாட்டிலே நிலைபெற்று வாழும் என்பது உறுதி.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

*திருக்குறள் — அரசியல், கல்வி 9.*

# 6. இராமநாதனின் கல்விப் பணிகள்

சென்ற நூற்றுண்டின் பிற்கூற்றிலே இலங்கை மக்களின் கல்வித் தேவைகள் மிகுதியும் உணரப்பட்டன. கீழ்த் திசையின் ஆத்ம ஞானமும், மேற்றிசையின் இலௌகிக ஞானமும் ஒன்றிணைந்த சிறந்ததொரு கல்வியின் மூலம் மக்களின் சிந்தனையையும், வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்திவிடக் கொலோனல் ஒல்கொட், அநகாரிக தர்மபால, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலான பெரியோர்கள் அரிதின் முயன்றனர். இவர்களின் வரிசையில் இராமநாதனையும் நாம் வைத்து என்றும் நன்றியுடன் நினைவுகூரல் வேண்டும்.

இராமநாதன் வாய்ச்சொல் வீரர் அல்லர்; அவர் செயல் வீரர். அவரின் செயல் வீரத்திற்கு எடுத்துக்காட்டுக்களே இராமநாதன் மகளிர் கல்லூரியும், பரமேஸ்வரக் கல்லூரியுமாகும். பரமேஸ்வரக் கல்லூரி 1974-10-06 தொடக்கம் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக இயங்கத் தொடங்கியுள்ளது. இலங்கையின் வடபகுதியிலே, பல்கலைக் கழகம் ஒன்று அமைத்தல்

வேண்டும் என்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் கனவு இவ்வாறு நிறைவேறியுள்ளதென லாம். பல்கலைக் கழகம் சம்பந்தமாக அவரின் கூற்றுப் பின்வருமாறு:

"கல்வி என்பது ஓர் இறுக்கமான அச்சிலே வார்த் தெடுக்கப்பட வேண்டிய பொருளன்று. கல்வியின் பொருளும், கல்வி முறையும் காலத்துக்குக் காலம், சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் நிலவிய கருத்துக்களும், வழக்கங்களும் அடிக்கடி மறைந்து, வேறு கருத்துக்களுக்கும் வழக்கங்களுக்கும் இடமளித்துள்ளன. காலப்போக்கிலே, இலங்கையில் வடபாகத்திலும் மேற்குப் பாகத்திலும், அங்கு வாழும் மக்களுடைய நன்மைகளுக்காக ஒவ்வொரு பல்கலைக் கழகம் தேவைப்படும். அந்நிய கல்விமான்கள் வற்புறுத்திய விஷயங்களையும், கல்வி முறைகளையும் அடிப்படையாகக் கொள்ளாது, வேறு விஷயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படையாகக் கொண்ட பல்கலைக் கழகங்களாக இவை தேவைப்படும். இப் பல்கலைக் கழகங்கள் எவ்வெவ் வீடங்களில் அமைக்கப்படுகின்றனவோ, அவ்வவ்விடங்களிலுள்ள நகரங்களின் அல்லது மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டவையாய் இருக்க வேண்டும்."

ஒரு காலத்தில் எமது கல்வித் திட்டத்திற் சமயங்கள் புறக்கணிக்கப்பட்டன. சமயச் சார்பற்ற கல்வியை அளிப்பதில் அக்கால அரசு தீவிரம் காட்டியது. ஆனால், இன்று அந்த நிலை இல்லை. ஒவ்வொரு பிள்ளையும் தனது சமயத்தைக் கட்டாயம் கற்றல் வேண்டும் என்ற திட்டம் இன்று நடைமுறையில் இருப்பது வரவேற்கத் தத்கது. ஆனால், சமயம் என்பது ஏட்டளவிலே கற்று, பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைவதற்குரிய ஒரு பாடம் அன்று. அது நடைமுறையிற் கைக்கொள்ளப் படவேண்டியது என்பதை இராமநாதன் உணர்ந்ததால் தாம் கட்டிய கல்லூரிகளின் ஒருபால் ஆலயங்களையும் அமைத்தார். யாழ்ப்பாணத்தில் முதன்முதல் நாவலர்

அவர்கள் கட்டியெழுப்பிய வித்தியாசாலையிலும், பின்னர் இராமநாதன் கட்டிய கல்லூரிகளிலுமே கோயில்களும் அருகிலே கட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

> "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்ருள் தொழாஅ ரெனின்"

என்ற திருவள்ளுவரின் பொன்மொழியை இவர்கள் பொன்னேபோற் போற்றினர் என்பது இதனுல் நன்கு புலனுகின்றது. அன்றியும், பிற சமய ஆதிக்கம் நமது சமகால இளஞ் சந்ததிகளைப் பாதிக்காதிருக்க, இவர்கள் அரண் அமைத்தனர் என்று கூறுவதும் பொருந்தும். தமிழ்ப் பெருவேந்தர்களின் ஆலயத் திருப்பணியைப் பின்பற்றிப் பொன்னம்பலவாணேசர் ஆலயத்தைக் கட்டிய இராமநாதன் தமது வித்தியாலயங்களிலும் ஆலயங்களை எழுப்பிக் கல்வியின் முதன்மையிலக்கினை நிறைவேற்றினுர் என்பது இவ்விடத்தில் நன்றியோடு நினைவு கூரவேண்டிய ஒன்ருகும்.

'பரமேஸ்வரக் கல்லூரி மாணவரின் இலட்சியங்கள்' என்ற சிறு நூலிலே இராமநாதன் குறிப்பிடுவனவற்றை நோக்கினுல், அவர் கொண்டிருந்த கல்வியிலக்கு நன்கு புலனுகும். "பரமேஸ்வரக் கல்லூரி, இந்திய ஞானிகளின் ஞானத்தோடு, தமிழ், சங்கத இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவெனத் தாபிக்கப்பட்டது. இக் கல்வியால், தீயவன் நல்லவனுய் மாறும் நன்மை ஏற்படும். குறும்புகளாலும், வல்லுணர்ச்சிகளாலும் உந்தப்படுபவன், அவற்றினை அடக்கி நற்பணிகளுக்கு உதவுவோனுவான். மந்தைபோலச் சோம்பி, வேலையற்று உழல்பவன் அத்தகைய தீமையிலே, தோயாதவரை ஊக்கமுடையோனுயும், பிறர் நலம் கருதுவோனுயும் மாறுவான். முரடனுயும், ஆபாசச் செயல்களில் ஈடுபடுவோனுயும் இருப்பவன் சீர்திருத்தப்படுவான். குறுகிய மனப்பான்மையும், வெறுப்புணர்வும் உடையோன் அனுதாபமும், சகிப்பு

மனப்பான்மையும் எய்தப் பெறுவான். ஒரு பிரச்சினை யையோ, அதன் வளர்ச்சியையோ அறிந்து தீர்க்க இய லாதவன் அவற்றை உடனடியாக இனங் கண்டுகொண்டு அவற்றின் காரணங்களை ஆராய்ந்து, பரிகாரந் தேடும் வழிவகைகளை அறிந்து நலம் வளர்க்கும் பணிகளிலே ஈடுபடுவான். சிந்தனையிலும் கருத்து வெளிப்பாட்டிலும் தெளிவில்லாதவன் நன்கு சிந்திக்கவும், கருத்தைத் திறம் பட வெளிப்படுத்தவும் ஆற்றல் பெறுவான். சிந்தனை யின்றி அந்நியரின், நடை, உடை, பாவனைகளைக் கேலி செய்யத்தக்க வகையிலே பின்பற்றுவோன், பரம்பரை பரம்பரையாய் நிலைபெற்றுவரும் தன் மூதாதையரின் இலட்சியங்களை, அவை எவ்வளவு தூரம் எமது தேவை களுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமாய் உள்ளன என்ற அறிவுடன், தான் பிறந்த நாட்டிற்குப் பொருந்தும் நடை, உடை, பாவனைகளை மேற்கொள்வான். திருப்தி யில்லா மனநிலையில் அலைந்து திரிவோன், தனது நிலையை உணர்ந்து தன்னையும் தான் பிறந்த சமுதா யத்தையும் மேலோங்கச் செய்ய முயல்வான். வெற்றுச் சிந்தனைகளாலும், கானல்நீர் அவாக்களாலும் தடுமாறு பவன் தன் கவனத்தையும், முயற்சியையும் ஒருமுகப் படுத்தி வாழ்வின் பிரதான கடமையாகிய இறை பத்தி யிலும், தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளிலும் ஈடுபடுத் துவான். இத்தகைய செயலுந்துதலால் அமையும் தனது இலட்சியங்கள் மக்களின் உலகியலானவையும், ஆன்மிக மானவையுமான மகிழ்ச்சியை நிலைபெறுத்தும் என்ற உணர்வோடு அவன் செயற்படுவான்."

கல்வியின் மூலம் உள்ளச் சமநிலைபெற்ற உயர் மகனை உருவாக்கலாம் என்று நம்பிச் செயலாற்றிய இராமநாதன், பெண்களும் தாம் கற்கும் கல்வியின் மூலம் பண்பும் பயனும் வாய்ந்த இல்லத்தரசிகளாக விளங்க வேண்டும் என்ற அவாவினையும் கொண்டிருந் தார். அந்த அவாவினால் உந்தப்பட்ட நிலையிலேயே அவர் பரமேஸ்வரக் கல்லூரியை அமைப்பதற்கு முன்னரே இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைத்தார் என்பது

குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார்: “இந்துப் பிள்ளைகளுக்கு இலௌகிகமும் ஆன்மிகமும் இணைந்ததான கல்வியினை அளிப்பதற்குகந்த கல்லூரி ஒன்றினை அமைக்கும் எண்ணம் என் உள்ளத்தில் நெடுங்காலமாய் இருந்து வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியினைக் கொழும்பிலே அமைப்பதனால் அங்குத் திரள் திரளாக இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்து குவியும் இந்துச் சிறுவர்களை அவர்களின் சமயத்திற்கு முரணான போக்குக்களிலும், சிற்றின்பப் போக்குக்களிலும், தேசீய முரண்பாட்டுச் செயல்களிலுமிருந்து மறப்பினை ஏற்படுத்தலாம் என்று கருதினேன். ஆனால், மூன்று ஆண்டுகளின் முன் நான் யாழ்ப்பாணத்திற்கு வருகை புரிந்தபொழுது இங்குச் சிறுவர்களிலும் சிறுமிகளின் நிலையே கொழும்பில் உள்ளதிலும் பயங்கரமாக இருக்கக் கண்டேன்.”

“யாழ்ப்பாணத்துச் சிறுவர்களுக்கெனச் சைவக் கோட்பாடுகளின் அடிப்படையில் நடைபெறும் உயர் பள்ளிகள் பல இருந்தன. ஆனால், சிறுமிகளோ ஒன்று கிறிஸ்தவக் கல்லூரிகளில் நுழைவநுமதி பெறல் வேண்டும், அல்லது தங்கள் படிப்பினைப் புறக்கணித்து வீடுகளிலேயே படிப்பின்றி இருத்தல் வேண்டும். இவர்களின் பெற்றோர் கிறிஸ்தவப் பள்ளிகளுக்குச் செல்லும் தம் பிள்ளைகளுடைய உள்ளங்களில் ஏற்படும் நஞ்சு பற்றிப் பெரிதும் வருந்துவதையும், கண்டன முறையீடுகள் செய்வதையும் என்னுற் காணமுடிந்தது. எனவே, இந்தத் துன்ப நிலையினை, சிறியரும் வளர்ந்தோருமான இந்து மாணவிகளுக்குத் தகுந்ததும், போதியதுமான பெரியதொரு கல்லூரியை அமைப்பதன் மூலம் போக்கி, அவர்களின் உலக வாழ்வினில் ஆன்ம திருப்தியை ஏற்படுத்தலாம் என்று தீர்மானித்தேன்.”

தமது செல்வத்தையும், உயர் நிலையினையும் உறுதுணையாகக்கொண்டு இராமநாதன் யாழ்ப்பாணத்திலேயே கல்லூரிகளை அமைத்தனரெனினும், தேசிய ரீதியில் எல்லா மக்களும் கல்வி பெறுவதற்கு அரசாங்கமே

நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்த வும், அதற்காகப் போராடவும் தவறவில்லை.

1881-ம் ஆண்டுக் கல்விக்கென ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிதியினை, அக்காலப் பொதுக் கல்வி இயக் குநரினலே தயாரிக்கப்பட்ட உதவி நிதி பெறும் பாட சாலைகளுக்கான திருத்தச் சட்டத்திற்கு அநுகூலமான வகையில் ஒதுக்கல் வேண்டும் என்று அந்நாட் குடியேற் றக் காரியதரிசி 1880 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் தேதி ஒரு பிரேரணையைச் சட்ட நிரூபண சபைக் கூட்டத்திலே பிரேரித்தார். இதனல், புதியனவாக இலங் கையின் பல பாகங்களிலும் தோன்றிக்கொண்டிருந்த பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்படுமென்பதையும் ஆரம் பக் கல்வி பெறும் வாய்ப்பினைக்கூட இந்நாட்டுச் சிறு வர்கள் இழப்பர் என்பதனையும் இராமநாதன் உணர்ந்து, மாணவர் வரவுச் சராசரியின் அடிப்படையில் உதவி நிதி வழங்கும் ஷரத்துக்குத் திருத்தப் பிரேரணை ஒன்று கொண்டுவந்தார். இத்திருத்தமானது சர்வசனக் கல்விக் குப் பெரிதும் உகந்ததாயிருந்தது. குடியேற்றக் காரிய தரிசி திரு. ஜோன் டக்ளஸ் அவர்களின் பிரேரணையைத் திருத்துமாறு கோரி, இராமநாதன் 1880 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் தேதி ஒரு சிறந்த சொற்பொழிவாற்றி ஞர். 'கல்வி வளர்ச்சியிலே நான் எப்பொழுதும் ஆழ மான ஈடுபாடு கொண்டவன்' எனத் தொடங்கி, அவர் ஆற்றிய உரையில் அரசாங்கத்தின் கடமையினை மிகவும் வற்புறுத்துதல் புலப்படும். "பொதுமக்களுக்கு வேண் டிய கல்வியினை அரசாங்கம் கொடுத்தல் வேண்டும் என்ற கோட்பாட்டினை ஒத்த வேறு எந்தக் கோட்பாடும் சர்வ தேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாயில்லை. எத்தனை தலைமுறை செல்லினும், மக்களுக்கு வேண்டிய பண் பாட்டை இக்கல்வியால் அளித்துவிடலாம் என்பது இய லாத காரியம். ஆனல், அவர்கள் தமக்குரிய வாழ்க்கை நிலைகளில் தம் கருமங்களைத் திறம்பட நடத்துவதற் கான கல்வி வழங்கப்படல் வேண்டும். எமது கடந்த

கால ஆட்சியாளர்களின் கல்வி இலட்சியமும் இவ்வகையிலேதான் இருந்தது."

இராமநாதன் தமது காலத்திலே வழங்கப்பட்ட ஆரம்பக் கல்வி — சுயபாஷைக் கல்வி — மிகவும் குறைபாடுடையதாய் இருக்கக் கண்டார். இதனைப் போக்குவதற்கு ஆங்கிலப் பாடநூல்கள் சிலவாயினும் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்படல் வேண்டும் என்றும், இம்மொழிபெயர்ப்புக்களைச் செய்வோரை இந்தியாவிற் சன்மானம் அளித்து ஊக்குவதுபோல இங்கும் ஊக்குவித்தல் அரசாங்கத்தின் கடமையென்றும், 1879-ம் ஆண்டிலேயே சட்டநிருபண சபையில் அவர் எடுத்துரைத்தார். இம்மொழிபெயர்ப்பு நூல்கள் சிறப்பாக ஆரம்ப விஞ்ஞான அறிவினையும், ஒழுக்கவியலையும் மாணவர்க்கு அறிவுறுத்துவனவாய் இருததல் வேண்டும் என்பதும் அவரின் நோக்கமாய் இருந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உகந்த நூல்கள் சில பற்றியும் அவர் தமது பேச்சிலே சுட்டிக் காட்டினுர்.

"சிங்கள, தமிழ் மாணவர் பண்பு நலத்திலேதான் குறைபாடுடையவர்களாய் விளங்குகின்றனர். எனவே, இவர்களின் பண்புநல அபிவிருத்தியை அரசு குறிக்கொண்டு ஆவன செய்தல் வேண்டும். இந்நாட்டின் இளைஞர் சமுதாயம், துவேஷமின்றியும், ஒருதலைச் சார்பின்றியும், சபலம் இன்றியும், உயர்வாகச் சிந்தித்தற்கு அவர்களை ஆயத்தம் செய்தல் வேண்டும்."

மாணவரின் பண்புநலத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆங்கில ஒழுக்கவியல் நூல்களை மொழிபெயர்த்தல் வேண்டும் என்று குறிப்பிட்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் தமிழிலுள்ள அறநூல்கள் இரண்டின் சில பகுதிகளுக்கு விளக்கமும் எழுதியுள்ளார். இவை மாணவர்க்குப் பெரும்பயன் அளிக்கவல்லன. 'ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம்', திருக்குறட் பாயிரமும், இராமநாதீயமும் (விளக்கம்) என்பன அவ்விரண்டு நூல்களுமாகும்.

ஏகாதிபத்திய ஆட்சி நிலவிய காலத்தில், கல்வியின் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்மையாய் நடந்துகொள்ளும் உத்தியோகத்தர் வகுப்பொன்றினை உற்பத்தி செய்வதாகவே இருந்தது. இவ்வாறு உற்பத்தி செய்யும் பொழுது இதற்காகப் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்வதையும் அவ்வேகாதிபத்தியம் விரும்பவில்லை. இந்நிலையில் இராமநாதன் கல்வியின் நோக்கம் இவ்வளவு குறுகியதாக இருக்கவேண்டியதில்லை என்பதையும், அதற்குச் செலவு செய்வதில் அதிக உலோபம் காட்டுதல் தவறு என்பதையும் ஆட்சியாளருக்குச் சுட்டிக் காட்டினார். "கல்வியின் பிரதிபலன் பவுன் – சிலிங் – பென்ஸில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதை ஒரு சிலருக்கு அறிவுறுத்தி, அவர்களை ஒப்புக்கொள்ள வைப்பது எளிதாய் இல்லை. இவர்கள் கல்விக்கென 1867 இற் செலவாகும் பணம 1868 இலோ, அல்லது 1869 இலேயோ திரும்பக் கிடைத்துவிடல் வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். நான் கல்வியின் பயன்களிற் சமூக, அரசியல் முன்னேற்றங்களே பிரதானமானவை எனக் கருதுகின்றேன். கல்வி பெற்று உலகிடையே செல்லும் இளைஞன ஒவ்வொருவனும் மக்களிடையே ஒரு சத்தியாய் விளங்கி, அவர்கள்மீது தன் செல்வாக்கினைப் பதித்துவிடுகின்றான. சமயம், அரசியல், ஒழுக்கவியல், சமூக முன்னேற்றம் என்பன அவன் உள்ளத்தே பதிந்து விளங்குகின்றன. இவ்வாறு பதிந்தவை அவன் தன்னிலும் கலவி குறைந்தோருடன் உரையாடுகையில் அவர்களின் அறிவை அபிவிருத்தியடையச் செய்கின்றன. இவ்வபிவிருத்தி படிப்படியாகவும், பலாத்காரமின்றியும் அவர்களின் நடத்தையை மாற்றி அமைத்து விடுகின்றன."

கல்வி வளர்ச்சி ஒன்றுதான் இந்நாட்டு மக்களின் அடிமைத் தளையினை அறுக்கவும், அவர்களைச் சுதந்திரராய்த் தலைநிமிர்ந்து நிற்க வைக்கவும் உதவவல்லது என்பதை இராமநாதன் நன்கு உணர்ந்திருந்தார்.

கல்வி வாய்ப்புப் பெறுவதில் ஏழை என்றும், செல்வர் என்றும் வேறுபாடு இருத்தல் கூடாது எனவும், இக் கல்வி வாய்ப்பினை அரசாங்கமும் பாரபட்சம் இன்றி யாவர்க்கும் வழங்கல் வேண்டும் எனவும் பாடுபட்டதோ டமையாது, தாமே இரு பெரிய கல்விக்கூடங்களையும் நிறுவி வழிகாட்டியவகையில் சேர். பொன். இராமநாதன் இந்நாட்டின் கல்வித்துறைக்கு மாபெரும் பணியாற்றியுள் ளார் என்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண் டிய ஒன்றேயாகும்.

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

*திருக்குறள் — அறத்துப்பால், வாழ்க்கைத் துணை நலம் 5.*

## 7. இராமநாதனின் வாழ்க்கைத் துணைவி

இராமநாதனின் முதல் மனைவியாரான செல்லாச்சி யம்மாள், இராஜேந்திரன், வாமதேவன் என்ற மக்களிரு வரையும் பெற்றெடுத்த சிலகாலத்தின் பின் காலமானர். இதன் பின் ஆன்மிக வாழ்விலேயே தலைப்பட்டு நின்ற இராமநாதனின் வாழ்க்கையிலே அவர் அரசாங்கச் சட்ட அதிகாரியாய் இருந்த காலத்தில் ஆங்கிலப் பெண்மணி ஒருவர் வந்து கலந்தார். அவர் பெயர் ஆர். எஸ் ஹரிசன் என்பதாகும். முதலில் அவர் இராமநாதனுக்குச் சிஷ்யை ஆகவும், பின்னர் பிரத்தியேகக் காரியதரிசியாகவும், ஈற்றில் லீலாவதி என்ற பெயருடன் இராமநாதனின் மனைவியார் ஆகவும் அமைந்தார்.

பிரமஞான சங்கத்தில் உறுப்பினராகிச் சமய ஒப்பியல் ஆராய்ச்சியிலே ஈடுபட்ட இந்த அம்மையார், இந்தியத் தத்துவ ஞானத்தினை அறிய விரும்பி இந்தியா வந்தார். அவர் இலங்கைக்கும் வந்து இராமநாதனின் சிஷ்யையாகிய வரலாறு மிகவும் சுவையானது. இராம நாதனின வாழ்க்கையிலே ஏற்பட்ட நலந்தீங்குகள் எல் லாவற்றிலும் அவரின் நிழல்போல் இருந்து அவருக்கு

அமைதி அளித்த பெருமை இவருக்கு உண்டு. ஆங்கில நடை, உடை, பாவனைகளைத் துறந்து, இந்து கலாசாரத்தின் ஆதர்சப் பெண்மணியாய் மாறி, இராமநாதனுக்கு ஏற்ற இலட்சிய மனைவியாய் அவர் வாழ்ந்தார். தம் கணவரின் தேவைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் அறிந்துகொண்டு அவற்றை நிறைவு செய்யும் ஒன்றே குறிக்கோளாய் வாழ்ந்து பதி சேவையிலே இன்பங் கண்டவர் லீலாவதியார். "நேரமும் தேவையும் உணர்ந்து உணவூட்டும் தாயாயும், மதி நிறைந்த நல்ல அமைச்சராயும், இராநாதனின் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று ஆவன செய்த இல்லக்கிழத்தியாயும், அவருக்குத் தொல்லை ஏற்படாதவாறு அவரின் நிலபுலன்களை எல்லாம் நிருவகித்துச் சிறந்த நிருவாகியாயும், அவர் 1930 ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்த பின்னர் அன்னாரின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்றிய சதியாயும் பலவகைச் சிறப்புக்களும் பொருந்த நல்வாழ்வு வாழ்ந்தார் இப்பெருங்குணச் செல்வி. இராமநாதன் இவரிடம் தன்னலமற்ற சேவையையும், தத்துவ ஞானத்துடன் கூடிய விவேகத்தையும், ஆன்ம சக்தியையும் கண்டார். மேதாவிலாசத்தினை ஊக்குபவராயும் பெருந்தகைமையைப் பேணுபவராயும் அமைந்து, பலதரப்பட்ட கடும் உழைப்புக்களையும் தியாகத்தையும் கொண்ட பெருவாழ்விற்குப் பொருத்தமான ஆற்றல் நிறை பங்காளராய் விளங்கிய இவரில் இராமநாதன் பல காலம் தாம் வேண்டி நின்ற இலட்சிய மனைவியைக் கண்டார்."

இராமநாதனோடு அமெரிக்கா சென்று திரும்பிய லீலாவதியார், "கிழக்கு நாட்டு மாணவர்க்கு மேற்கு நாட்டின் சித்திரங்கள்" என்ற சுவை நிறைந்த பயண நூல் ஒன்றினை எழுதினர். இருபதாம் நூற்றுண்டுத் தொடக்கத்திலே அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேற்றிசை நாடுகள் இருந்த நிலையினை அறிய இந்நூல் பெரிதும் உதவும். ஆங்கிலேயரதும் அமெரிக்கரினதும் உழைப்புத் திறன், தொழில் வளர்ச்சி, நாகரிகப் பண்புகள், செல்வப் பெருக்கம், அறிவைத் தேடுவதிலிருந்த

ஆர்வம் முதலிய பலவும் இந்நூலிலே நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஸ்ரீமதி இராமநாதன் அம்மையார், தாம் மொழி பெயர்த்து வெளியிட்ட இராமாயண நூலின் (ஆங்கிலம்) முன்னுரையிலே குறித்துள்ளவை, அவர் தமது கணவர் மீது கொண்டிருந்த பத்தியின் அளவினை நன்கு காட்டு கின்றன.

"முப்பதாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் புகழ் சான்ற இதிகாசமாகிய இராமாயணத்தைப் படிக்கத் தொடங்கினேன். சேர். இராமநாதன் அவர்கள் ஒரு நாள் அதனைக் கொணர்ந்து உரத்து வாசித்துத் தமக்கே உரிய கவர்ச்சியான முறையில் விளக்கமும் தந்தார். நான் அதனைப் படிப்பதால் புராதன பூமியாகிய பராத தேசம் பற்றி அதிகமாக அறிந்துகொள்ளலாம் என்று எடுத்துரைத்தார். ஆக நான் அப்புத்தகத்தினை எடுத்து வாசிக்கத் தொடங்கியதும், அதிலேயே ஆழ்ந்து போனேன். நான் அதிலிருந்து சில பகுதிகளைச் சேர். இராமநாதன் அவர்களுக்கு மீட்டுக் கூற, நெடுநாள் களுக்கு முன்பே அவர் இந்தியாவின் அருஞ் செல்வ மாகிய அந்த இதிகாச ஞானசமுத்திரத்தின் சில துளி களை உண்மையோடும் கருணையோடும் எனக்கு அறி வுறுத்தியிருந்தார். அப்பொழுது அவர் இராமாயணத் தினை எளிய முறையில் எழுதுமாறு என்னைப் பணிக்க நான் அதனை எழுதத் தொடங்கினேன். எழுதும் பொழுதே இரரமனதும் சீதையினதும் உணர்வு கிழள்ந்து எழும் பாடல்களை நான் கற்கலானேன். இதனுல் இந் தியாவின் மீது நான் கொண்டிருந்த நேசம் மேலும் ஆழமாயிற்று."

"சேர். இராமநாதன் தமது பேரான்மாவின் உள் ளொளிகொண்டு எனக்குக் காட்டிய ஞானத்தின் மகிழ்ச்சி நிறைந்த சிந்தனைகள் அவ்வேளைகளிலே என்னைச் சூழ்ந்து கொண்டன. தம் இறுதி நாட்களில் அவர்,

தமது ஓய்வு நேரங்களை இராமாயணத்திற்கு அறிமுக வுரையும் குறிப்புக்களும் எழுதுவதிலே செலவிட்டார். அது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி தருவதாயிற்று. எங் குச் செல்லினும் இராமாயணத்தை அவர் தம்மோடு கொண்டு சென்றார். 1930 ஆம் ஆண்டு இறுதியாக அவர் இங்கிலாந்துப் பயணத்தை மேற்கொண்டபோது கப்பலிலேயே இக்குறிப்புக்களை எழுதுவதில் அயராது ஈடுபட்டார். அங்கிருந்து திரும்பியதும் குறிப்புக்களைத் திருத்தி அச்சிற்குக் கொடுப்பதில் முனைந்தார். தமது இறுதிச் சுகவீனத்தில் இருந்து அவர் எழுதிய கடைசிச் சொற்கள் (16 ஆம் பக்கத்திலே கடைசியாகச் சேர்த் துக் கொண்டவை) பிரமத்தை விளக்கும் இறுதிப் பகுதி யாகிய ருத்திரமூர்த்தி பற்றியதாகும். அது மாணிக்க வாசக சுவாமிகளின் அழகு தமிழில் அமைந்த போற் றித் திருவகவலின் 'பரம் பரம் ஜோதி பரனே போற்றி' என்பதாகும். இதனை அறிவோர் மகிழ்வர் என்பது உறுதி. இவ்வடியினை அவர் தமது நினைவில் இருந்து எழுதினார். இது அவரின் உள்ளம் அப்பேரொளியிலே எத்துணை ஈடுபட்டுப் பதிந்து நின்றது என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. அவர் மிகவும் காத லித்த மாணிக்கவாசக சுவாமிகளின் இந்த அடியானது அவர் உலகில் இருந்து எவ்வளவு விரைவாக விடுபட் டுக் கொண்டிருந்தார் என்பதையும் காட்டுகிறது. அந் தப் பரஞ்சுடர் அவரைச் சிறிது சிறிதாய்த் தன்னுள் அடக்கி இறுதியில் வேறின்றித் தானாகவே நின்றது. அவரைக் கேட்கக் காது பெற்றவருக்கு அவரின் இறுதிச் செய்தியாக இவ்வழகிய திருவாக்கு அமைந்தது. அவ் வேளையில் இதுவே அவரின் பிரியாவிடைச் சொல்லு மாகும், என்பதை நான் உணர்ந்தேன். துன்ப நிகழ்ச்சி நடந்து முடிந்தது. எமது மாபெரும் ஆசான், தலைவன், நண்பர் மறைந்த ஓரிரு மாதங்களின் பின்னரே அவர் கூறியதன் உண்மைப் பொருள் விளங்குவதாயிற்று. கடவுளுக்கும் மக்களுக்கும் அர்ப்பணமான ஒரு பெரு வாழ்வின் இறுதியினை அறிவித்தற்கு இச்சொற்கள் சாலப்

பொருந்துவனவேயாகும். அவரின் அடிகளில் இருந்து கற்கத் தொடங்கிப் பல ஆண்டுகளாய்விட்டன. இக்காலப் பகுதியிலே அவர் என் பெரு நண்பராயும் அன்பு கனிந்த ஆசானும் வார்த்தைகளால் வருணிக்க இயலாத என்றும் மங்காத உண்மையின் அருட்சோதியாயும் ஆகிவிட்டார்."

ஸ்ரீமதி இராமநாதன் அம்மையாரின் கல்விப் பரப்பையும் பெண் கல்விக்கு அவர் ஆற்றிய பணியையும் போற்றும் வகையில் இலங்கைப் பல்கலைக் கழகம் அவருக்குச் 'சட்டக் கலாநிதி' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கிற்று.

இப்பெருமாட்டியார் 1953 ஆம் ஆண்டிலே தம் கணவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இறையொளியிற் கலந்தார்.

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

*திருக்குறள் — அறத்துப்பால், ஒழுக்கமுடைமை 1.*

# 8. இராமநாதனின் குணநலன்களும், பலதுறை ஆற்றல்களும்

இராமநாதன் பிரசித்தி பெற்ற பெருங் குடும்பம் ஒன்றிலே தோன்றியவர். செல்வத்திலே திளைத்தவர். அதிகாரமும், அந்தஸ்தும் அவரின் அடிகளை வருடின. எனினும், அவரின் வாழ்வியலோ, ஆன்மிக வளச்சியோ இவற்றால் பாதிக்கப்பட்டதில்லை.

சுதந்திர உணர்வும், தேசீய எழுச்சியும், மொழிப் பற்றும் கருக்கொண்ட நிலையில் வெளிப்படாதிருந்த காலம் அது. நிலக்கிழார்களும், வணிகரும், அரசின் அடிதாங்கிகளும் வாழ்க்கையிலே முன்னேறிச் சமூக மதிப்பைப் பெறச் சாதாரண மக்கள் அடங்கி, ஒடுங்கி ஊமைகள் போல வாழ்ந்து வந்தனர். அரசை எதிர்ப் பது தற்கொலைக்குச் சமமானது என்ற உணர்ச்சி அக்காலத்தில் நிலவியது. படித்தோர் எல்லாம் அரசு எது செய்தாலும் அது சரியானது என்று தலையாட்டிப் பொம்மைகளாய் வாழ்ந்து வந்தனர். அந்த வேளையிலே மக்களுடைய மனச்சாட்சியின் குரலாய் இராமநாதன்

தோன்றினர். நீதிக்குப் புறமான செயல்கள் எங்கு, எவ்வடிவிலே வெளிப்படினும், அதனை இறுதிவரை எதிர்த்துப் போராடுவதை அவர் தமது வாழ்விலக்காய்க் கொண்டார்.

ஆட்சிப் பீடத்தைத் தைரியமாய் நிமிர்ந்து நோக்கி, அதன்மீது குற்றஞ்சாட்டித் தம் சுட்டுவிரலை முதலில் நீட்டியவர் இராமநாதனே. "அரசரால் மக்களின் பணிகளை ஆற்றுவதற்கென நியமிக்கப்பட்டோர், தம் கடமையினை, நன்முறையில் ஆற்றல் வேண்டும். மக்களின் அமைதி நிறைந்த நல்வாழ்வே அவர்களின் தலையாய கடனுதல் வேண்டும். மக்களின் உரிமைகளும், சுதந்திரமும், சிதையாது காக்கவேண்டிய பொறுப்பு இவர்களுக்கு உண்டு என்று நியாயபூர்வமாக நாம் எதிர்பார்க்கலாம். பிரித்தானிய அரசின் நீதி பற்றிய மக்களின் நம்பிக்கையானது ஈடாடக்கூடிய எந்தச் செயலினையும் ஆட்சியாளர் மேற்கொள்ளலாகாது" என்று சட்டநிருபண சபையிலே அவர் முழங்கினுர்.

செல்வமும், அதிகாரமும் வாய்ந்த குடிப்பிறப்புக் காரணமாக அவர் அகங்காரங் கொண்டவராகவோ, சாதாரண மக்களில் இரக்கங் காட்டாதவராகவோ இருந்ததில்லை. குடிமகன் ஒவ்வொருவனும் ஆண்டில் ஒரு கிழமை காட்டாயமாக வீதி அமைப்பு வேலையில் ஈடுபடல் வேண்டுமென்ற சட்டத்தை எதிர்த்து அவர் போராடியமை அவர் மக்கள்மீது கொண்டிருந்த கருணையின் வெளிப்பாடேயன்றோ? சுன்னுகச் சந்தையிலே வியாபாரஞ் செய்யும் மக்களிடமிருந்து வழக்கத்திலும் ஒரு சதம் கூடுதலாகக் கிராமச் சங்கத்தினர் வாடகையாகக் கோரியதை எதிர்த்தும், சந்தை வியாபாரிகளின் ஏழ்மை நிலைமையினை விளக்கியும், யாழ்ப்பாணச் சந்தைச் சட்டத்தின் விளைவிகளை எடுத்துரைத்தும் அவராற்றிய சொற்பொழிவு அவரின் மனிதாபிமானத்தை நன்கு எடுத்துக் காட்டுவதாகும். இந்தியக் கூலிகளின் அயரா உழைப்பினுல் தோட்ட முதலாளிகளும், அரசாங்கமும்

பெறும் இலாபத்தின் அளவினை அவர் எடுத்துக்காட்டி, இவ்வாறு செல்வத்தைக் கொழிக்கச் செய்யும் அந்தக் கூலி மக்களின் கல்வி, வைத்தியச் செலவுகளை முதலாளிகளே பொறுத்தல் வேண்டும் எனச் சட்டநிரூபணசபையிலே அவர் பேசியதும் — அவரின் இரக்க சிந்தைக்கு எடுத்துக்காட்டாகும். அவரின் நியாயபூர்வமான விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், இந்தியத் தோட்டக் கூலிகள் பெருநன்மை அடைந்தனர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பொதுப் பணியில் இலட்சியங்களை எடுத்து அழகுறப் பேசிக் கைதட்டல்களையும், பாராட்டுக்களையும் பெற்றதோடு திருப்தியடைந்து, சொந்த வாழ்க்கையிலே கருணையின்றி வாழ்வதை இராமநாதன் கனவிலும் அறியார். அவரின் வாழ்க்கையிலே இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

ஒருமுறை பொன்னம்பலவாணேசுவரர் கோயிற் கட்டடத் திருப்பணியிலே ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்து தேறித் தாயகமாகிய தென்னிந்தியாவிற்குச் சிலநாள் விடுமுறையிலே செல்ல வேண்டியவரானுர். அவர் தமக்கு ஈவு வேண்டும் என்று கோரிக் கடிதம் எழுதியதற்கு மறுமொழியாக இராமநாதன் அவரின் பணிகளைப் பாராட்டி எழுதியதோடு. அவரது பயணச் செலவுக்காய் நூறு ரூபாய் பணமும் அனுப்பி வைத்தார். தொழிற் சங்கங்களோ, தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களோ இல்லாத அந்தக் காலத்திலேயே இராமநாதன், தமது பணியாளருக்கு விடுமுறை காலத்தில் வேதனம் வழங்குவதாய் உறுதி அளித்தும் எழுதியிருந்தார்.

இராமநாதன் இதனோடு நின்றுரல்லர். தாயகம் திரும்பிய பணியாளர், தம் மனைவிக்கு நோய் என எழுதியதை அடுத்து, அவருக்கு ஆறுதல் மொழிகளை வரைந்ததோடு, இருநூறு ரூபாய் பணமும் நன்கொடையாய்

அனுப்பி வைத்தார். இச்செயல் அவரின் பரந்த உளப் பாங்கினை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

சேர். முத்துக்குமாரசுவாமியின் செல்வாக்காலும், மேற்கு நாட்டு வாழ்க்கை முறையாலும், ஆங்கிலக் கல்வி முறையாலும் ஈர்க்கப்பட்ட இராமநாதனின் ஆரம்பகால வாழ்க்கையில் ஆடம்பரம் கலந்திருந்தது உண்மையே. உடையிலும், உணவிலும், பழக்க வழக்கங்களிலும் அவர் 'பிறவுண் சாகிப்' ஆக வாழ்ந்த நாள்களும் இருந்தன. விஸ்கி முதலிய குடிவகைகளைக் குடித்தும், வெள்ளைத் துரை மகன்போல உயர்ந்த தொப்பி அணிந்தும், மயங்கியிருந்ததற்கும் சான்றுகள் உள.

ஆனால், மிக விரைவில் இந்த மயக்கநிலையினின்றும் அவர் விடுபட்டார். எளிமை நிறைந்த சைவ உணவு உண்டும் தமிழ்க் கனவான் உடையணிந்தும், உள்ளத்தால் மட்டுமன்றி உடலாலும் அவர் தமது தனித்தன்மையைப் பேணி வந்தமை கருதத்தக்கது. இளவயதிலே சேர். முத்துக்குமாரசுவாமியாலே கத்திரிக்கப்பட்ட தமது குடுமியை முதிய பராயத்தில் மீண்டும் அவர் வளர்த்தமை, அவரின் சுதேசியப் பண்பாட்டுணர்வுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

அவர் ஆங்கிலத்தில் மாத்திரமன்றித் தமிழிலும் சிறந்த எழுத்தாளராயும் பேச்சாளராயும் விளங்கியுள்ளார். அமெரிக்காவிற்கு மதபோதகாசிரியராய்ச் சென்று ஆங்கிலத்திலே பேருரைகள் நிகழ்த்திய அவர் மதுரைச் செந்தமிழ்ச் சங்க விழாக்கள், சென்னைச் சைவ சித்தாந்த சமாச மகாநாடுகள், திருவள்ளுவர் மகாசபை போன்ற வற்றிற்கெல்லாம் தலைமை தாங்கி அரிய தமிழ்ப் பேருரைகளை நிகழ்த்தியுள்ளார்.

திருக்குறட் பாயிரம் இராமநாத பாஷ்யம், ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம், செந்தமிழ் இலக்கணம் முதலிய தமிழ் நூல்களை அவர் எழுதித் தமிழ்த் தாயை அணி செய்தார். வடமொழிச் சொற்

களைப் பெருமளவு கொண்ட தமிழ் உரைநடையினை அவர் எழுதினலும், அவரின் தமிழ் நடை கம்பீரமும் தெளிவும் எளிமையும் கொண்டது. அதனூடாக அவரது ஆளுமையும், நோக்கும், போக்கும், நன்கு புலனுகின்றன.

"ஆசை தணல்போன்றது. விஷயங்களைப் பற்றி எரியும். ஒன்றைப் புசித்த பின் வேருென்றை நாடும். போதும் என்ற தன்மை அதற்கில்லை. ஆசையிற் சிக்குண்ட ஜீவனுக்கு அறிவும் அன்பும் குன்றும். இவை குறைய ஆசை பெருகும். இந்த நிலையில் ஆசையே தான் என்று ஜீவாத்மா மயங்கிக் கெடும்."

"அறத்தை மறவாதவர்கள் அந்தத் தேவாத்ம பக்தியாற் காக்கப்பட்டு, மேன்மேலும் அறிவிலும், அன்பிலும் விருத்தி பெறுவார்கள்."

(திருட்குறட் பாயிர ராமநாத பஷ்யம். பக்கம் 98.)

இராமநாதனின் சாதனைகள் அவரின் தனித் திறமையால் மட்டும் ஏற்படுத்தப்பட்டவையல்ல. இடைவிடாத உழைப்பும், விடாமுயற்சியும் திறமையோடு சேர்ந்து அவரை வெற்றிப் பாதையிலே வழி நடத்தின. ஆரம்ப தோல்விகளைக் கண்டு சோர்ந்து, துவண்டு செயலற்றுப் போகும் தன்மைக்கும் அவருக்கும் பெருந் தொலைவாகும். 'மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணுயிருந்து' அவர் வெற்றிமேல் வெற்றி ஈட்டினர். 'உழைப்பின் வாரா உறுதியும் உளதோ' என்ற பொன்மொழிக்கு இராமநாதனின் வாழ்க்கை நல்லதொரு சான்ருகும்.

அரசியலும், பொதுப்பணியும், மொழித்துறையும், ஆன்மஞானமும், கல்விப் பணியும் மட்டுமேயன்றிச் சட்டத்துறையிலும் அவர் பெரும்பணியாற்றியிருக்கிருர். பதினைந்து பாகங்கள் கொண்ட 'புதிய சட்ட அறிக்கைகள்' இவராலே தொகுக்கப்பட்டன. உயர் நீதிமன்றத் தீர்ப்புக்களின் தொகுப்பாயுள்ள இவை சிறந்த தீர்ப்புக்

கள் வழங்குவதற்கு வழிகாட்டிகளாய் அமைந்து, நீதித் துறைக்குப் பெரும் துணையாயின.

இவற்றோடு பிரதம நீதியரசரான சேர். ஜோண் பியர் அவர்களின் வேண்டுகோட்படி, உயர் நீதிமன்றச் சுற்று நிருபங்களையும் அவர் தொகுத்தளித்தார். புதிய பொறுப்புக்களையும், கடும் உழைப்பையும் என்றும் வர வேற்று அவற்றின் மூலம், தமது முத்திரையைப் பதித்த இராமநாதனின் அருந்திறல், முன்னேறத் துடிக்கும் இளைஞர்களுக்குக் கலங்கரை விளக்கமாகும்.

எதிலும் ஓரளவு வெற்றியே போதும் என்று திருப்தி யடைவது இராமநாதன் வழக்கம் அன்று. ஒவ்வொன் றும் மிக உயர்ந்ததாய், இதற்குமேல் இயற்றல் இயலாது என்ற மனநிறைவினைத் தரவல்லதாய் அமைதலில் அவர் தம் உள்ளத்தினை ஈடுபடுத்திச் செயல்புரிந்தார். பொன்னம்பலவாணேசுவரர் ஆலயம், பரமேஸ்வரக் கல் லூரி, இராமநாதன் கல்லூரி என்பன, 'உள்ளுவதெல் லாம் உயர்வுள்ளும்' அவரின் மனப்பாங்கிற்கு எடுத் துக்காட்டுகளாகும்.

சிவந்த மேனி, கம்பீரமாய் நிமிர்ந்து விளங்கும் நெடிய தோற்றம், ஆண்மையும் அறிவும் சுடரும் அழ கிய முகம், நீண்ட ஓவர்கோட், அதன்மீது உத்தரிய மாய் அணிந்த சால்வை, தலையிலே தலைப்பாகை ஆகிய இவற்றுடன் ஓர் அரசர்க்கே உரிய ஆளுமையோடு காட்சி தந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர் கள் கே. சி., சி. எம். ஜி., எம். எல். சி. ஈழநாட்டின் தவப்பேறு என்பதில் ஐயம் இல்லை. நாவலர் பெருமா னின் தீர்க்கதரிசனத்தால் இலங்கைச் சட்டநிரூபண சபையின் உள்ளே தமிழர் பிரதிநிதியாகச் சென்று, தேசிய வீரராய், இலங்கைத் தாயின் தலைமகனாய், முதல் மகனாய்த் தலை நிமிர்ந்து நின்ற அன்னாரின் நாமம் என் றென்றும் வாழ்க.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

**திருக்குறள் — பொருட்பால், பெரியாரைத் துணைக்கோடல் 1.**

# 9. சமகாலப் பெரியோர்கள்

## (அ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

**1822 — 1879**

சைவமும் தமிழுங் காத்த தன்னளியாளர். 1879 இற் சேர். முத்துக்குமாரசுவாமியின் இறப்பினல் இலங்கைச் சட்டநிருபண சபையில் வெற்றிடமான தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதித் தெரிவிலே இராமநாதனுடன் போட்டியிட்ட கிறிஸ்தோப்பர் பிறிற்ரோ, யாழ்ப்பாண வாக்காளரின் ஆதரவைப் பெற ஆறுமுகநாவலரவர்களின் உதவியை நாடினர்.

அவ்வேளையில் யாழ்ப்பாண நீதிமன்றத்திலே நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உரிமைபற்றி அதன் தேவஸ்தான காவலருக்கும் கோவில் அருச்சர்களாகிய பிராமணருக்குமிடையே வழக்கு நடந்து கொண்டிருந்தது. இவ்வழக்கிலே தேவத்தானக் காவலரின் சார்பிலே சிரேஷ்ட வழக்கறிஞராய்ப் பிறிற்ரோ அமர்ந்து வழக்கை நடத்தினர். நாவலர் பிராமணருக்குச் சார்பாயிருந்தார்,

நாவலரின் ஆதரவு தமக்குக் கிடைத்தால் மட்டுமே யாழ்ப்பாண வாக்குகளைத் தாம் பெறல் இயலும் என்பதை நன்குணர்ந்த பிறிற்ரூே நாவலருக்கு ஒரு கடிதம் எழுதினுர். பிறிற்ரூே எழுதிய அக்கடிதத்திலே தமக்குச் சார்பாக நாவலர் யாழ்ப்பாண வாக்குக்களைத் திருப்பித் தந்தால், தாம் தமது கட்சிக்காரராகிய தேவஸ்தானக் காவலரின் உரிமையை வலியுறுத்தி வாதாடாது, பிராமணர் வெற்றி பெற வகை செய்வதாய்க் குறித்திருந்தார்.

நேர்மையும் தரும சிந்தையும் வாய்ந்த நாவலருக்குப் பிறிற்ரூேவின் இழி செயல் வெகுளியை ஏற்படுத்திற்று. இராமநாதனுக்கு ஆதரவு திரட்டும் கூட்டத்திலே அவர் தமது நோயையும் பொருட்படுத்தாது எழுந்திருந்து இக்கடிதத்தைப் பகிரங்கமாக வாசித்துப் பிறிற்ரூேவின் முகமூடியைக் கிழித்தெறிந்தார்; பிறிற்ரூேவின் சுயரூபத்தை அங்கிருந்தோருக்கு எடுத்துக் காட்டினுர். பயன் யாழ்ப்பாண ஆதரவு முழுவதும் இராமநாதனுக்கே கிடைக்க, அவர் வெற்றி வாகை சூடினுர். இந்நிகழ்ச்சியின் விபரத்தை 'நாவலர் எழுந்தார்' என்ற பண்டிதமணியின் கட்டுரையிலே காணலாம். சட்டசபையிலே நாவலரை 'இந்துக்களின் இந்து' என்று இராமநாதன் புகழ்ந்து பேசியுள்ளார்.

## (ஆ) பொன்னம்பலம் குமாரசுவாமி முதலியார்

**1849 — 1906**

இராமநாதனின் தமையனுரான இவர் இராமநாதனிலும் விவேகி என இவரின் வரலாறறிந்தோர் உரைப்பர். இவர் ஒரு நியாயதுரந்தரர்; 1893 இல் இராமநாதனின் விலைகலால் வெற்றிடமான சட்டநிருபண சபை அங்கத்தவர் பதவிக்குத் தெரிவு பெற்ருர். தம் தம்பியார் போலவே துணிவுடனும், வீரத்துடனும் சட்டநிருபண சபையிலே மக்களின் உரிமைக்காகப் போராடினுர். தொடர்ந்து இருபதாண்டுகள் கொழும்பு மாநகர சபை உறுப்பினராயிருந்த பெருமையும் இவருக்குண்டு.

சிறந்த விவாத நிபுணராயும், அரசாங்க நடவடிக்கை களின் நிறைகுறைகளைத் தீவிரமாய் எடுத்தியம்புபவரா யும் குமாரசுவாமி முதலியார் விளங்கினர். அவர் சட்ட நிரூபணசபை உறுப்பினராய் இருந்த காலத்தில் முஸ் லிங்கள் தவிர்ந்த மற்றைய இனத்தவர் யாவரும் தங்கள் திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற மசோதா விவாதத்திற்கு வந்தபோது, அதனை எதிர்த்து முதலியார் நிகழ்த்திய உரை மிகவும் பிரபலமானது.

"நான் இந்தச் சட்டம் அவசியமில்லை என்பதைக் காட்டியுள்ளேன். இந்த மசோதாவிற்கு எவ்வித அவ சியமும நேரவில்லை. (1) இப்பதிவு முறையில்லாமலே திருமணங்கள் சுமுகமாக நடந்தேறுகின்றன. எவரும் இதுவரை பதிவின்மை சார்பாக முறையீடுகள் செய்ய வில்லை. (2) இந்துக்களின் உணர்வுகளை இஃது ஊறு செய்வதாய் உள்ளது என விளக்கியுள்ளேன். (3) இப் பொழுது நீங்கள் பிரேரிக்கும் இந்தப் பிரேரணை இங் கிலாந்திலோ, ஸ்கொட்லாந்திலோ, அயர்லாந்திலோ, இந்தியாவிலோ எங்கும் சட்டமாய் இருக்கவில்லை. மதிப் பிற்குரிய என் நண்பராகிய பொருளாளர் ஆங்கிலச் சட்டங்களிலே கைதேர்ந்தவர். நான் சொல்லும் எதனை யும், அது சட்டத்தில் இல்லை என்று கூறுபவர் அவர். அத்தகையவர், இவ்விவாகப் பதிவு மசோதாவிற்கு இங் கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து அல்லது வேல்ஸ் அல்லது இந்திய நாடுகளின சட்டங்களி லிருந்து ஆதாரம காட்டுவாராக. இவ்வாறு காட்டு வாரானல் நான் எனது எதிர்ப்பை மீட்டுக் கொள்கின றேன். ஆனல் அது அவரால் முடியாது."

சட்டநிரூபண சபையிலே இம்மசோதா நிறை வேறியதாயினும், குமாரசுவாமி முதலியார் சோர்ந்து தோல்வியை ஏற்று வாளா இருந்தாரல்லர். தம் தம்பி யார் போலவே அயராது உழைத்துக் குடியேற்ற நாட் டுச் செயலாளரிடமிருந்து விவாகப் பதிவுச் சட்டத்தை

மீட்டுக்கொள்ளச் செய்தார். எவ்வித மாற்றமுமின்றி முஸ்லிங்களல்லாதாரை விவாகப் பதிவு செய்யக் கட்டுப் படுத்தும் விதியின்றி, முன்போலவே சட்டம் அமைய அவர் ஆவன செய்தார்.

குமாரசுவாமி முதலியார் ஆங்கிலத்தோடு, தமிழ், சங்கத மொழிகளிலும் சிறந்த அறிவு படைத்திருந்தார். தம் சமகாலத்திலே தலைசிறந்த பேச்சாளர்களுள் ஒருவராய் அவர் கருதப்பட்டார். ஆங்கில அரசை வன்மையாய் எதிர்த்தவராதலின், அவரது அங்கத்துவப் பதவிக் காலம் 1895 இல் முற்றுப்பெற்றபொழுது அதை மீட்டும் புதுப்பிக்க அரசியலார் அவருக்கு வாய்ப்பளிக்கவில்லை. முதலியார் யாழ்ப்பாணச் சைவ மக்களின் அழைப்பின் பேரில் 1895 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வருகை புரிந்தார். யாழ்ப்பாண இந்துக் கல்லூரியைச் சமயாசார முறைப்படி தொடக்கி வைத்த அவர், இவ்வைபவத்தின்போது சிறந்ததொரு சொற்பொழிவினை நிகழ்த்தினர். அவர் நிதியளித்துத் தொடங்கிய இரு புலமைப் பரிசில்கள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் இற்றைவரையுள்ளன. யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அரசினர் நிதியுதவியோடு இயங்கும் நிறுவனமாய் ஆனதற்கு அவரே காரணகர்த்தா ஆவர்.

1906 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆந் தேதி அவர் காலமானதையிட்டு இலங்கை ஒப்சேவர் பத்திரிகையில் வெளியான அநுதாபச் செய்தியின் ஒரு பகுதி வருமாறு:

"முதலியார் பொன்னம்பலம் குமாரசுவாமி தம் நாட்டு மக்களுக்கு ஆற்றல் நிறைந்த சக்தியாய் விளங்கி வந்தார். தமிழ் மக்கள் இற்றைவரை அவரிலும் சிறந்தவரும், சுதந்திர மனப்போக்குடையவருமான வேறொருவரைத் தம் பிரதிநிதியாகச் சட்டநிரூபணசபையிலே பெற்றதில்லை."

## (இ) சேர். பொன்னம்பலம் அருணுசலம்

(1853 — 1924)

இவர் இராமநாதனின் தம்பியார். இராணி கலைக் கழகத்திலே கல்வி கற்று முதல்வராய்த் தேறிப் புலமைப் பரிசில் பெற்றுக் கேம்பிரிஜ் பல்கலைக் கழகம் சென்று எம். ஏ. பட்டமும், நாட்டாட்சிப் பரீட்சைத் தேர்வும் பெற்ருர்; அதன்பின் நாடு திரும்பிய இப்பெருமகனுர் அரசாங்கத்திலே பல உயர் பதவிகளை வகித்தார். அவர் வகித்த மிக உயர்ந்த பதவி, பதிவுப் பெருந்தலைவர் (Registrar General) என்பது. 1901 ஆம் ஆண்டிலே குடிசன மதிப்பெடுப்பிற்கென அவர் வகுத்த திட்டம் ஈடிணை அற்றது. அவர் அன்று வகுத்த அமைப்பு முறையே இன்றுவரை அதிக மாற்றமின்றிச் சனக் கணக்கெடுப்பிலே பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு முப்பத்தெட்டாண்டுகள் புகழ்பூத்த அரசியற் சேவையாற்றிய பின்னர் இளைப்பாறிய அருணுசலம், தேச சேவையைத் தம் உயிர் மூச்சாகக் கொண்டு உழைத்தார். மக்களின் கல்வி, வைத்தியம், பொருளாதாரம் ஆகியன சிறந்தோங்க வேண்டும் என்பது அவரின் கோட்பாடாய் இருந்து வந்தது. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கென அவரால் இலங்கைச் சமூக சேவைச் சங்கம் நிறுவப் பெற்றது. தம் தமையனுர்கள் போலவே சட்டநிரூபணசபை அங்கத்தவராகி, அவர் அளப்பருஞ் சேவைகள் பல ஆற்றியுள்ளார். இலங்கைப் பல்கலைக் கழகம் நிறுவப்படல் வேண்டும் என்ற கருத்தினை முதன்முதல் வெளியிட்ட பெருமையும் அதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த சிறப்பும் இவருக்குண்டு.

ஆங்கில இலக்கியப் புலமையும், கீழ்த்திசை இலக்கியப் பேரறிவும் வாய்ந்த அருணுசலம், கேட்பார் வேட்கும் வண்ணம் சொற்பொழிவாற்றும் திறனும் பெற்றிருந்தார். தமையனுராகிய இராமநாதனுக்குச் சிலை

நிறுவியது போலவே இவருக்கும் பாராளுமன்ற மைதானத்திலே சிலை நிறுவப்பட்டுள்ளது. ஆங்கில அரசு இவருக்குச் 'சேர்' பட்டம் அளித்துக் கௌரவித்தமையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அருணசலத்தின் மகன் சேர். மகாதேவா அரசாங்க சபைக்கு யாழ்ப்பாணப் பகுதிப் பிரதிநிதியாகத் தெரிவு பெற்று, உள்நாட்டு மந்திரியாகவும் கடமையாற்றி, இறுதிக்காலத்திலே பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராயும் விளங்கியமை 'தந்தையைப் போல மகன்' என்ற கூற்றிற்கு மிகப் பொருத்தமாயுள்ளது.

ஒரு குடும்பத்திலே சகோதரர் மூவர், எல்லாவகை ஆற்றல்களோடும் விளங்கி, நாட்டுப் பணியிலும் தலை சிறந்து மக்கள் யாவரதும் நன்றிக்கும் உரியவர்களானமை வரலாறு காணுத அற்புத நிகழ்ச்சியேயாகும்.

## (ஈ) கலாயோகி ஆனந்த கே. குமாரசுவாமி

### 1877 — 1947

இராமநாதனின் மாமனாகிய சேர். முத்துக்குமாரசுவாமிக்கும் எலிசபெத் பீபி என்ற ஆங்கிலப் பெண்மணிக்கும் ஏக புத்திரராய் 1877 ஆம் ஆண்டு பிறந்தவர்தாம் ஆனந்தக்குமாரசுவாமியாவர். மிக இளமையிலேயே தந்தையாரை இழந்து, இங்கிலாந்திலிருந்த இவர் லண்டன் பல்கலைக் கழகத்திலே கல்வி கற்று பி. எஸ்ஸி. பட்டம் பெற்ருர். பின் இலங்கை வந்து தாதுப் பொருளாராய்ச்சித் தலைவராய் அமர்ந்து பணியாற்றிய காலத்திலே 'தோரியனைட்' என்ற புதுவகைத் தாதுப் பொருளைக் கண்டுபிடித்தார். இவ்வருங் கண்டுபிடிப்பிற்காய் இலண்டன் பல்கலைக் கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இவ்வாறு விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போதிலும் தந்தையாரின் கலையுணர்வு இவரின் குருதி நாளங்களிலும் ஓடிக்கொண்டிருந்தமையால், ஆனந்த

கே. குமாரசுவாமியின் உள்ளம் கலை ஆய்விலே பெரிதும் ஈடுபடலாயிற்று. சிற்ப சித்திர ஆராய்வும், அதன் பயனாய் அவர் எழுதிய சிற்ப சித்திர ஆராய்ச்சி நூல்களும் அவருக்கு உலகப் புகழை ஈட்டிக் கொடுத்தன.

ஆனந்தக் குமாரசுவாமி தாம் ஒரு தமிழ் மகன் என்பதால் தமக்கு ஆங்கில அரசு உத்தியோக உயர்வு தர மறுத்தமை காரணமாக அது காலை தாம் வகித்த உத்தியோகத்தினின்றும் விலகி இந்தியாவிற்குச் சென்றார்; அங்கிருந்த காலத்தில் முதன்முதலாக மகாகவி இரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து வெளியிட்டார்.

பின்னர் இங்கிலாந்து சென்று சில காலம் வாழ்ந்த பின்னர் மீண்டும் இந்தியா திரும்பிச் சிற்பக்கலை ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டார்; 1912 இற் சில காலம் சாந்தி நிகேதனிலே தங்கியிருந்தார். இக்காலப் பகுதிகளில், கீழ்த் திசைச் சிற்பங்களின் சிறப்பியல்புகளை ஆராய்ந்து, அவை பற்றி அவர் எழுதிய நூல்கள் மேற்கு நாட்டவரின் கலை அறியாமையைப் போக்குவனவாய் அமைந்தன.

1917-ம் ஆண்டிலே அமெரிக்காவில் உள்ள பொஸ்ரன் நகர நூதனசாலையின் இந்தியக் கலைப் பிரிவிற் காப்பாளராய் அமர்ந்தும், பின் பதவி உயர்வு பெற்று இஸ்லாமிய, இந்துக் கலை ஆராய்ச்சித்துறைத் தலைவராயும் இவர் ஆற்றிய கலைப் பணிகள் அளப்பரியன. இக்காலத்தில் உலகின் பல நாடுகளுக்கும் சென்று கலை ஆராய்ச்சிகள் நிகழ்த்தினார். ராஜாஜி, எஸ். ராதாக்கிருஷ்ணன் முதலான சான்றோர் பலரும் இவர் எழுதியுள்ள கலையாய்வு நூல்களைப் படித்து வானளாவப் புகழ்ந்துள்ளனர். இவற்றிலிருந்து இவரின் கலைத் துறையாற்றல் எத்தகையது என்பதை நாம் ஓரளவு உணரலாம்.

மத்திய காலச் சிங்களக் கலை, சிவதாண்டவம், இந்திய, இந்தோனேஷியக் கலை, இலங்கையின் வெண்கல உருவங்கள், இந்தியச் சிற்பி முதலியன இவர் எழுதிய சிற்ப, ஓவியக் கலை பற்றிய நூல்களுட் சிலவாகும். இவை மட்டுமன்றிச் சிற்ப இலக்கணங்களை விளக்கும் பல வடமொழி நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துமுள்ளார்.

இந்திய தத்துவ ஞானத்திலும் ஆனந்தக் குமாரசுவாமிக்கு ஆழ்ந்த புலமை இருந்தது. மெய்யியல் விளக்க நூல்கள் சிலவும் அவரால் எழுதப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின், கிழக்கின் கலை ஞானமும் மெய்யியலும் அழகுறச் சங்கமிக்கும் ஞானசாகரம் என்றே ஆனந்தக் குமாரசுவாமியைக் கூறல் வேண்டும்.

கலையை யோகமாகக்கொண்டு சாதனை புரிந்த கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி இலங்கை வந்திருந்த காலத்தில் யாழ்ப்பணத்திற்கும் வருகை புரிந்தார். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் அவருக்குக் "கலாவிநோதன்" என்ற பட்டத்தினை அளித்ததன் மூலம் தன்னையும் கௌரவித்துக்கொண்டது.

ஆனந்தக் குமாரசுவாமி தமிழ்ப் பெருமகன் ஒருவரின் அருந்தவப் புதல்வராதலால், அவர் தமிழ்மீதும் தணியாக் காதல் கொண்டிருந்தார். பன்மொழி அறிவு வாய்க்கப்பெற்றிருந்தும் தம் தந்தையார் மொழியைத் தாம் அறிந்திருக்கவில்லையே என்ற மனக்குறை அவருக்கு இருந்து வந்தது. இதனை அவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் நிகழ்த்திய உரையிலிருந்து அறியலாம் (1906). "எங்கள் பாஷையாகிய தமிழில் நான் பேசமுடியாமல் இருப்பதை மன்னிக்கும்படி முதலாவதாக உங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். பல சந்தர்ப்பங்கள் என் வாழ்நாட்களின் பெரும்பாகத்தை இங்கிலாந்தில் கழிக்கச் செய்துவிட்டன. இதனால் எனது சொந்தப் பாஷையையே பேசமுடியாதவனாய் இருந்தபோதிலும்,

தமிழன் அந்தப் பாஷையைப் படிக்கவேண்டிய அவசியத்தையும், அதன் சிறப்பையும் நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். எங்கள் சொந்த இலக்கியங்களையும் பெரும்பான்மை மொழிபெயர்ப்பிலும், சிறுபான்மை மூலத்திலும் படித்துள்ளேன்.”

“என்னுடைய பெருவிருப்பம் நீங்கள் என்னை உங்களில் ஒருவனுக வேற்கவேண்டும் என்பதே. ஆகவே, நீங்கள் என்னை ஒரு தமிழன் ஆகவும், நண்பன் ஆகவும் ஏற்றிருப்பதற்காக உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான்கு வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு மூன்ருவது முறையாக வந்தபொழுது ஆங்கிலேயன் ஆகவே வந்தேன். இப்பொழுது நான இந்தியத் தாயின் புத்திரனுக மறுபிறப்பெடுத்து, ஒரு குழந்தை தன் பெற்ருேருடன் சேருகிறமாதிரி உங்களிடம் வந்துள்ளேன்.”

“என்வாழ்நாளிற் பெரும் பாகத்தை இங்கிலாந்தில் செலவழித்த போதிலும் இங்கு வந்ததன் பின்னர் எங்கள் பண்பாட்டின் சிறப்பை உணர்ந்துள்ளேன். ஆகையால் எங்களில் அநேகர் மேனுட்டு நாகரிகத்தைப் பின்பற்றுவதனுல் ஏற்படும் தீமைகளை உணர்ந்து, அதைப் போக்க என்னுல் ஆனமுயற்சிகள் செய்து வருகின்றேன்.” (கலாயோகி ஆனந்த கே. குமாரசுவாசாமி காலாகேசரி — ஆ. தம்பித்துரை பக்-18-19) சேர். முத்துக்குமாரசுவாமி இங்கிலாந்துலே கீழ்த்திசைக் கலாசாரத்தினைத் தமது நாடகமாகிய அரிச்சந்திரனுல் மாத்திரமன்றித் தமது எச்சமாகிய புதல்வராலும் ஆழமாக வேர் ஊன்றி விட்டார் என்பது கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் வாழ்வாலும் வாக்காலும் நன்கு புலனுகின்றது.

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

(குறள்)

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

திருக்குறள் — அறத்துப்பால், வாய்மை 4.

# 10. இராமநாதன் - வாழ்த்தும் வாக்கும்

## க. வாழ்த்துரைகள்

### (அ) திருவளரும் இராமநாதக் குரிசில்

கருதுபெருஞ் செல்வம் இனம் ஆயுள் செயல் கல்வியெனக்
கழறும் ஐந்துட்
பொருவரிய ஒவ்வொன்றும் மேலதிகம் மதிப்பாகப்
புகலும் நூல்கள்
திருவளரும் இராமநா தக்குரிசிற் கிவை ஐந்தும்
சிறந்த தென்றால்
ஒருவரிவர்க் கிணையென்றிங் கோதரிதால் உண்மைதெரிந்
துரைக்குங் காலே.

(புலோலி ஆரிய திராவிட மகா பண்டிதர் பிரமஸ்ரீ ம. முத்துக் குமாரசுவாமிக் குருக்கள் — ஸ்ரீராமநாதமான்மியம், சிறப்புப் பாயிரம்.)

## (ஆ) இராமநாதன் உயர்புகழ்

புகரிலங்கைத் தீவளவோ பரவுமிந் தியநாடு பரவியப்பாற்
றிகழுறுமா சியகண்டத் திடைமருவு தேயமெலாஞ் சென்று
நீடும்
இகழ்விலயி ரோப்ப கண்டத் தொடுமிளிரா பிரிக்க கண்டம்
யாவுஞ் செல்லும்
புகலுமம ரிக்ககண்டம் புகும்ராம நாதனுயர் புகழாமன்றே.

(மகாவித்துவான் சி கணேசையர் — ஷை நூல், சிறப்புப் பாயிரம் )

## (இ) மகிழ்படைத்த பெருமையோன்

திருமகட்குப் புயங்கொடுத்துக் கலைமகட்கு நாக்கொடுத்துத்
தெய்வத் தர்மத்(து)
ஒருமகட்குக் கைகொடுத்து மெய்கொடுத்த சிவஞான
உணர்வுச் செல்வம்
தருமகட்குத் தலைகொடுத்துச் சச்சிதா னந்தத்தின்
சாரந் துய்ப்போன்
பெருமகளாம் இலங்கைக்குப் புகழ்கொடுத்து மகிழ்படைத்த
பெருமை யோனே.

(பிரமஸ்ரீ க நவநீத கிருஷ்ண பாரதியார், — ஷை நூல், சிறப்புப் பாயிரம் )

## (ஈ) ஞாந பாநு

பொன்னாடென் றுலகனைத்தும் புகழுமொளிப் பொருளாகிப்
பொருந்தும் ஈழ
நன்னாடு செய்ததவப் பயனாக அவதரித்த
ஞாந பாநு
எந்நாடுந் தன்கிரண ஒளிப்பிழம்பிற் றிழைத்துமகிழ்
வெய்த வெளிக்
கன்னாடுங் கீர்த்தியினான் றன்புகழே கவிகளெலாங்
கருது மேலோன்.

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை — ஷை நூல், சிறப்புப் பாயிரம் )

## (உ) யாவையும் அமைந்த மேலோன்

நலக்கலை அறிவிற் சான்றோர் நயந்துபா மாலை சூட்டற்
கிலக்கமாம் இலக்க ணங்கள் யாவையும் அமைந்த மேலோன்
துலக்கமாம் இராம நாத தூயவன் ஒருவன் அன்றி
நிலக்கணே இந்த நாளில் நிகழ்த்திடற் குரியார் யாரே.

**( ஸ்ரீமாந். ச. பொன்னம்பலபிள்ளை — 'ஸ்ரீராமநாதமான்மியம்' ஆசிரியர் — பாடல் 1039.)**

## (ஊ) பொன். இராமநாதன்

பொன்ராம நாதன் ஈழம்
போற்றும் வீரத் தலைவன்
தன்காலத் தமிழர்க் கன்புத்
தாயைப் போன்ற தலைவன். (1)

கரும்பினிய தமிழைக் கற்றுக்
கருணை நிறைந்த தலைவன்
இரும்பு மனமும் இளகும் வண்ணம்
இனிய சொல்லும் தலைவன். (2)

தெய்வமெம்மைக் காக்கும் என்ற
சிந்தை மகிழுந் தலைவன்
சைவநெறியின் மரபை உலகில்
தழைக்கச் செய்த தலைவன். (3)

இலங்கும்பர மேசு வரா
இராம நாத னென்றே
துலங்குங்கல் லூரி இரண்டைத்
தோற்று வித்த தலைவன். (4)

மன்னுபுகழ்க் கொழும்பில் சைவ
வாழ்வு நின்று மலரப்
பொன்னம்பல வாணர் கோவில்
புனைந்து போற்றும் தலைவன். (5)

**( வித்துவான் க. வேந்தனார், கவிதைப் பூம்பொழில் — பக்கம் 53.)**

## (எ) அவர் போன்ருேர் ஒருசிலரே

"நான் ஓர் இலங்கையனுனல், சேர் பொன்னம்பலம் இராமநாதன் பற்றியே சிறப்பாகப் பெருமைப்படுவேன் என்று நினைக்கிறேன். அவரின் பணிகள் யாவும் குறிப்பிடத் தகுந்தவை. வாழ்வின் பல்வேறு துறைகளையும் தொட்டு, தொட்ட ஒவ்வொன்றிலும் தனித்தன்மை பொறித்த அவர் போன்ற ஒருசிலரே வரலாற்றில் வருகின்றனர்.

(தேசாதிபதி ஹேபர்ட் ஸ்ரான்லி — சேர். பொன்னம்பலம் இராமநாதன் வாழ்க்கை என்ற ஆங்கில நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

## (ஏ) சர்வதேச மதிப்படைந்த தேசீய வீரர்

"சேர். பொன்னம்பலம் இராமநாதன் சர்வதேச மதிப்பைப் பெற்ற தேசிய வீரராவர். அவர் தம் நினைவு பேணிக் காத்தற்கும் போற்றுதற்கும் உரியதாகும். எமது குழந்தைகளுக்கும், குழந்தைகளின் குழந்தைகளுக்கும், காத்து அளிக்கத்தக்க பரம்பரைச் செல்வமுமாகும்."

(கே. பீ. எஸ். மேனன் (இராசதந்திர நிபுணர்) ஷை நூல்.)

## (ஐ) சட்டநூல் அறிஞர்

"நியாயவாதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர் எப்பொழுதும் வீரராய்த் திகழ்ந்தார். சட்டக் கல்வியிலும், தருக்கவியலிலும் அவர் சிறந்த அறிஞராய் விளங்கினர். சட்டத்தைச் செயற்படுத்துவதிலும் பார்க்க அதன் பரந்த பல துறைகளிலும் பெற்ற அறிவால் அவர் மேலானவராய் இருந்தார். நற்பிரசைகள் ஆகவும், மேலான பொறுப்புணர்ச்சியுடன் வாழவும் சட்டம் பயிற்சி தருவதாதலால் அதனைக் கற்கும் கல்வி பற்றி அவர் ஆர்வத்தோடு பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்."

(நீதியரசர் ரீ. எஃப். கார்வின், ஷை நூல்.)

## (ஓ) ஆபத்தான போட்டியாளர்

"(நீதிமன்றத்தில்) அவர் எனக்கு ஓர் ஆபத்தான போட்டியாளராய் இருந்தார். வினாக் கிளர்த்துவதிலும் தமது பக்க நியாயத்தை வலியுறுத்துவதிலும் அவர் மிகுந்த திறமை பெற்றிருந்தார். வாக்கு வல்லபத்துடன் பதிலடி கொடுப்பதில் அவர் இணையற்றவர். அவரின் நியாய வாதத்திலே ஒருவகை அமைதி நிலவி, எல்லோரையுங் கவர்வதாயிருந்தது."

(ஏ. டபிள்யூ. ஜெயவர்த்தனு கே. சி, ஷை நூல்)

## (ஓ) வாழ்வுப் பாதையிலே தீபம் ஏற்றியவர்

"திரு. இராமநாதன் அமெரிக்காவிலே பல நண்பர்களை விடுத்துச் செல்கிறார். அவர்களுட் பலர் அவரிடமிருந்து புதியதோர் ஒளியையும் நம்பிக்கையையும் புத்தூக்கத்தையும் பெற்றுள்ளனர். இவை அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே தொடர்ந்து ஒளி கான்று அவர்களை ஊக்குவிக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர்."

(மைரன் எச். ஃபெல்ப்ஸ் — 'மேற்கு நாடுகளிடையே காணப்படும் ஆன்மப் பண்பு' முன்னுரையிலிருந்து)

## (ஔ) நேசம் நிறைந்த ஆசான்

அவரின் (இராமநாதனின்) அடிக் கீழ் அமர்ந்து நான் கற்கத் தொடங்கிப் பல ஆண்டுகளாய் விட்டன. இக்காலப் பிரிவிலே அவர் என் மாபெரும் நண்பராயும், நேசம் நிறைந்த ஆசானும், என்றென்றும் மங்காது ஒளிகாலும் கருணையும், உண்மையும் நிறைந்த சுடரொளித் தீபமாகவும் விளங்கினர். இந்த ஒளி நிலையினை வார்த்தைகள் கொண்டு வருணிப்பது இயலாததாகும்.

(இராமநாதன் அம்மையார் — அவர் எழுதிய 'இராமாயணம்' என்னும் ஆங்கில நூலின் முன்னுரையிலிருந்து)

## உ. வாக்குகள்

### (அ) மனக்கவலை ஏன்?

பஞ்சக்ருத்தியங்களை நடத்தி வரும் பரமேஸ்வரனே ஒவ்வொருவனுக்கும் அவனவன் கர்மத்திற்கேற்றபடி தநு, கரண, புவன, போகங்களைக் கொடுத்திருக்கிறார் என்றும், அவை பிரிய வேண்டிய காலத்திற் பிரித்து வைப்பார் என்றும், மீளவும் முத்தி பெறும் வரையில் கூட்டியும் பிரித்தும் அப்பாலுங் கருணையோடு உதவுவார் என்றும் நிச்சயித்த விவேகிகளுக்கு மனக்கவலை இராது.

(திருக்குறட் பாயிர இராமநாதபாஷ்யம்)

### (ஆ) பொய்தீர் ஒழுக்கமும் பொய் ஒழுக்கமும்

ஐம்புல அவிப்பிற்கு உற்றதுணை பொய்தீர் ஒழுக்கம்.

பொய் ஒழுக்கமாவது மித்யா சாரம். (பொய் — மித்தை, அசத் பொருள், ஆசாரம் நடை) பொய்யொழுக்கத்தின் ப்ரதான கொள்கை, தோன்றி அழியும் தேகத்தை நான் என்றிருத்தல்.

இந்தத் தேகவான் மண், பெண், பொன் முதலிய அழியும் பொருள்களைப் பரம்பொருள் என்று எண்ணி, இவற்றைப் பெறுவதற்கு அநேக ப்ரயத்நங்கள் செய்து, இல்வாழ்க்கைக்குரிய சிற்றின்ப சுகங்களை விட மேலான சுகங்கள் இல்லை என்று கருதி, மோசம் போவான். வேறொருவித தேகவான் கடன்காரர் பயத்தால், அல்லது சத்ரு, மித்ரு கோபத்தால், அல்லது பொருள், கீர்த்தி முதலியவற்றை இழந்த துக்கத்தால், அல்லது நோய்களால் வாதிக்கப்பட்டுத் தோன்றின காயக் கிலேசத்தால், இல்வாழ்க்கையை விட்டுப் போலித் துறவியாவான்.

துறவு பூண்ட பிறகு இவன் சிவயோகஞ் செய்வது போல, வாக்கையும் காயத்தையும் அடக்கி ஒரு பக்கத்திலிருக்கும்பொழுது, முன் நடந்த காரியங்களையும், நிகழ் காலத்தில் தான்படும் அவதிகளையும், எதிர்காலத்தில் தான் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் மனோராஜ்யம்

செய்து துன்பப்படுவான். இப்படிப்பட்ட போலித் துறவியைப் பகவான் பகவத்கீதையில் கீழ்வருமாறு மித்யாசார சந்யாசி என்று கண்டித்தார். "எவன் கர்மேந்திரியங்களை மனசால் இந்த்ரியாரத்தங்களை நினைக்கின்றானோ, அந்தவித மூடபுத்தியுள்ளவன் மித்யாசாரம் என்று கூறப்படுகின்றான்."

இதற்கு அடுத்த மந்த்ரத்தில் இவனிலும் வேறான ஸதாசார ஸந்யாசி என்பவனைக் கீழ்வருமாறு கூறினார்: "அர்ஜுந, மனசால் இந்த்ரியங்களை ஒடுக்கிக் கர்மயோகம் என்ற நிஷ்காம கர்மானுஷ்டானத்தைக் கர்மேந்த்ரியங்களால் எவன் சங்கமற்றுத் தொடங்கிச் சாதிக்கின்றானோ அவன் இவனிலும் வேறு"

சதாசாரம் என்ற நிலையைப் பொய்தீர் ஒழுக்கம் என்றார். அதாவது பொய்ப்பொருட் பற்றுக்களை அறுத்து, மெய்ப் பொருளாகிய பரமாத்மாவை த்ரிகரணங்களாலும் வழுவாது வழிபடுதலாம்.

பொய்தீர் அநுஷ்டானங்கள், கேட்டல் (ப்ரணவம்), சிந்தித்தல் (மனனம்), தெளிதல் (நிதித்யாஸநம்), ஸமாதி கூடல் என நால்வகைப்படும்.

கேட்டல் ஆவது முற்பிறவிகளிற் செய்த நற்கர்மங்களால் ஈஸ்வரார்ப்பணபுத்தி ப்ரபலமானவர்கள் ஞானகுருவைப் பெற்று அவரது பல யுக்திகளால் போதிகக்கப்பட்ட பதி, பசு, பாச லக்ஷணங்களைப் ப்ரவணஞ் செய்தல்.

ப்ரவணஞ் செய்த உண்மைகளை மீட்டும், மீட்டும் மனஸில் உறுதிப்படுத்தல் சிந்தித்தல் அல்லது மனனஞ் செய்தல் எனப்படும்.

ஸமாதி கூடல் என்றது ஆதி என்ற மனசை ஸமப்படுத்தி நினைப்பு மறப்பற்றுத் தன்னந்தனியாய் நிற்றல்

ஐம்பொறி அடக்கத்தாலும் பொய் தீர்க்கும் நெறிகளாலும் மோக்ஷம் பெற்ற ஞானகுருவின் உபதேசக் கிரமத்தில் நின்ற சீடன் அந்தச் சம்பத்தைத் தானும் அடைவான் என்று ஆறுங் குறளிற் போதித்து, மேல் வருங் குறளில் மோக்ஷத்துக்கு லக்ஷணங் கூறுகிறார்.

(ஷி நூல்)

## (இ) குருவே துணை

நம்பிக்கையில் எழுச்சியும், கடவுள் பத்தியில் வைராக்கியமும் குருவைக் கருவியாகக் கொண்டே தோன்றுகின்றன. ஆன்மாவையும் இறைவனையும் உறவுபடுத்தும் உண்மைகள் ஞானனுபவங்களாய் முகிழ்த்தெழல, அவற்றைப் போதிக்கின்ற குருவின் ஆழ்ந்த பேரறிவிலேயே தங்கியுள்ளன. குருவின் சொந்த வாழ்க்கை, சாதனைகள், அநுபவங்கள் என்பனவே அவரின் பேரறிவை நிருணயிக்கின்றன. இவையில்லையேல் சாதகனின் உள்ளம் குருவினை நாடும் உந்தலை அடையமாட்டாது... குருவின் வாழ்க்கை மேலும் மேலும் தூயதாக அவரின் ஞான சாதனையும் மேன்மைபெறும். அவரின் போதனைகளின் சிறப்பு உயர உயர அவருக்குத் தம் சீடன் மீதுள்ள உரிமையின் அளவும் கூடுதலாகும்.

(‘மேற்கு நாடுகளின் ஆன்மப் பண்பு’ என்ற இராமநாதனின் அமெரிக்கச் சொற்பொழிவு நூலிலிருந்து தமிழாக்கியது பக். 17.)

## (ஈ) அன்பும் ஆண்டவனும்

“அன்பே இறைவன்; ஆகவே அன்பில் வாழ்பவன் இறைவனில் வாழ்வோனவன்; இறைவனும் அவனுள் வாழ்வான்.” (I, யோன் IV 16, மத்தேயு சுவிசேஷத்தின் V-VII அதிகாரங்களிலே யேசுகிறிஸ்துநாதர் சாந்தி அல்லது அன்பின் கோட்பாட்டைப் பலவேறு உதாரணங்களால் விளக்குகின்றார். இறை தத்துவம் அல்லது அவனது சாம்ராச்சியம் (மோட்சம்) ஒழுக்கநிலை நிற்போர்க்கே கிட்டுமல்லாது, அறிவாளரின் விவேகத்தினுல் அதனைப் பெறமுடியாது என்று இவ்வுதாரணங்களின் மூலம் யேசுகிறிஸ்து விளக்குகின்றார். இவ்வகையிலே யூத அறிவுவாதிகளிலிருந்து (Scribes) அவர் வேறுபடுகின்றார்.

(யேசுவின் உபதேசங்கள் — மத்தேயு சுவிசேஷத்தின்படி — அவற்றிற்கு இறையனுபவ ஒளியில் ஸ்ரீபரானந்தா (இராமநாதன்) ஆர். எல். ஹரிசனுக்குக் கொடுத்த விளக்கம், என்ற ஆங்கில நூலிலிருந்து தமிழாக்கியது பக். 65)

## (உ) கல்வியிற் கட்டுப்பாடும் ஒழுங்கும்

வாழ்க்கையில் எது நல்லது, எது உயர்ந்தது என்பதை உண்மையாகக் கற்கவேண்டும் என்ற ஆர்வமுள்ள மாணக்கர் அல்லது சீடர் மிகப் புராதன காலத்திலேயே எமது ஞானிகளால் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கென வகுத்துத் தந்துள்ள விதிகளையும் கட்டுப்பாடுகளையும் மிகவும் கவனமாக நினைவில் வைத்திருத்தல் வேண்டும். உண்மையான சீடன் ஒருவனின் அமைதி நிறைந்த உள்ள நிலையே கட்டுப்பாடாகும். இந்நிலையில் நிற்கும் ஒருவனுக்கு எச்சிந்தனைகள், எச்சொற்கள், எச்செயல்கள் அங்கீகரிக்கத் தக்கவை, எவை அங்கீகரிக்கத்தகாதவை என்பது நன்கு புலனாகும். அவன் தனது உள்ளத்தைப் பழுதாக்கவல்ல தீமைகள் தன் புலன்களை அணுகாதவாறு மிகப் பாதுகாப்புடன் இருப்பான். சிந்தனைகளை உருவாக்கும் பொறியெனத்தகும் அவன் உள்ளம் தூய்மையற்ற அவாக்களும் எண்ணங்களும் தோன்றிப் பெருக எக்காலத்தும் இடமளிக்காது. வெறுப்பையும், துவேஷத்தையும், பயனற்ற முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் சொற்களை அவன் வாக்கு என்றும் வெளியிடாது. இழிவான நோக்கங்களுக்கு அவன் உடலில் உள்ள கை, கால் ஆகிய எந்த உறுப்புக்களும் இடம் அளிக்கா.

**('பரமேசுவரக் கல்லூரி மாணவரின், இலட்சியம்' என்ற துண்டுப்பிரசுரத் (ஆங்கிலத்தில் இராமநாதன் எழுதியது) திலிருந்து பக். 4)**

## (ஊ) இலங்கையரின் நிருவாக ஆற்றல்

மாட்சிமை தங்கிய தேசாதிபதியவர்கள், ஒரு காலத்தில் இலங்கையர் நீதிபதிக் கடமையாற்றுவதிற் பெற்றுள்ள ஆற்றல் விவாதத்திற்குரிய ஒரு விடயமாகக் கொள்ளப்பட்டதனை நினைவு கூரல் வேண்டும். இப்பொழுது நிருவாகக் கடமையில் இலங்கையர் பெற்றுள்ள ஆற்றலினை ஆங்கில அரசு மறுக்கின்றதோ என்பது எனக்குத் தெரியாது. இலங்கையரின் நிருவாகத்திறன்பற்றிப் பரிசோதனை நடத்தப்படுமாயின் அக்கனவான்கள் தாங்கள் சிறந்த நிருவாகி

கள் என்பதனைத் தாம் முன்பு நீதிபதிகளாயிருந்து தம் திறமையினை நிரூபித்ததுபோல நிரூபிப்பர் என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமும் இல்லை.

(எம். வைத்திலிங்கம் — சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்க்கை. பக். 150)

## (எ) ஆபத்து! கவனம்!

"வெளிநாட்டிலிருந்து இங்கு வரும் அதிகாரிகளிடம் சிக்கல்நிறைந்த சீர்திருத்தங்களுக்கான சட்டங்களை அமைக்கும் பணியினை அளிப்பதால் மிகுந்த ஆபத்து ஏற்படுகின்றது என்பதை இலங்கை போதிய அளவு உணரவில்லை எனக் குறிப்பிட விரும்புகிறேன்."

(ஷை நூல். பக். 388)

## (ஏ) வடக்கு வாழ்கிறதா?

வசதிகளிடையே செல்வ மிகுதியோடு வாழும் நாம், வடமாகாண மக்கள் அநுபவித்து வரும் இடர்ப்பாடுகளை விளங்குதல் இயலாது. அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகம் பற்றி நாம் யாதும் அறியோம். அவர்களின் தேவைகளை இங்கிருந்தபடி பிரவசனம் செய்வது எளிது. நாம் அம்மக்களிடையே சென்று, அவர்களின் மொழியிலே பேசி, அவர்களின் உண்மையான நிலைபற்றி அவர்கள் வாயிலாகவே விளக்கம் பெறுதவரை அவர்களின் தேவைகளையும், விருப்பங்களையும் எம்மால் அறிந்து கொள்ளல் இயலாது.

(ஷை நூல். பக் 403)

## (ஐ) நன்றி மறவேல்

உனக்காவது, உறவினர்க்காவது, உன் சனத்துக்காவது, உலகத்துக்காவது ஒருவன் நன்மை செய்தால் அந்த நன்மையை உன் மனசில் நின்று வழுவ விடலாகாது.

(இராமநாதன் விளக்கம் எழுதிய ஔவைநாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம் என்ற நூலிலிருந்து பக். 31)

## (ஓ) இராசத் துரோகிகள்

அரசனுக்குத் தம் குறையை ஓதும்படி வரும் ஏழைகளுக்கு அநேக தடைகளை உண்டாக்கித் தந்திரமாய் அவர்களிடம் பணம் பறிக்கின்றவர்கள் இராசத் துரோகிகளாகிக் கொடிய துன்பங்களுக்கு ஆளாவார்கள்.

(ஷை நூல். பக். 34)

## (ஓ) வளர்ச்சிக்கு வழி தன்மொழிக் கல்வியே

சிங்கள உதடுகள் சிங்களத்தைப் பேசாவிடில் அதனைப் பேசுவதற்கு இங்கு யார் உளர்? ஒரு சமுதாயம் பிழைகளின்றும் தவிர்ந்து மேலோங்கவும், சீர்திருந்தவும், மேலான அறிவியல் வளர்ச்சி பெறவும், தன் சொந்த மொழியினைப் பயன்படுத்தாவிடில் இவை எவ்வாறு சாத்தியமாகும்?

(சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்க்கை பக். 475)

## (ஔ) உருத்திராக்கப் பூனை

'நான் கொலை செய்யவில்லை, நான் களவு செய்யவில்லை, நான் கள்ளுண்ணவில்லை, நான் பொய் சொல்லவில்லை' என்று கூறுகின்றவன் கடையிலுள்ள மாமிசத்தை வாங்குவித்துப் புசித்துக் கொண்டும், ஒருவன்மேல் குற்றம் சுமத்தி அவனுடைய கீர்த்தியைப் பங்கம் பண்ணிக் கொண்டும், அறிவை மயக்கும் "உவையினை"யும், புகையிலையையும் அடிக்கடி உபயோகித்துக் கொண்டும், தன் சித்தத்தில் உள்ளதை மறைக்கும் பொருட்டுத் தந்திரமான சொற்களால் வேறோர் அர்த்தமாகும்படி பேசிக்கொண்டும் ஒழுகுவானயின், அவன் அழகுள்ள வாழ்வாகிய பேரறிவையும், பேரன்பையுமு அடைய மாட்டான்.

(ஆத்திசூடி மந்திர விளக்கம். பக். 44)

உ

## சேர். பொன். இராமநாதன் அவர்கள் இயற்றிய நூல்கள்

### தமிழ்

| | | |
|---|---|---|
| 1. | ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம் | திருமகள் அச்சியந்திரசாலை சுன்னாகம் 1961 |
| 2. | செந்தமிழ் இலக்கணம் | அடிசன் அச்சுக்கூடம் சென்னை 1929 |
| 3. | திருக்குறட் பாயிர இராமநாதபாஷ்யம் | |
| 4. | பகவத் கீதா தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் | நாவலர் அச்சுக்கூடம் யாழ்ப்பாணம் 1927 |

### ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| 1. | An Eastern Exposition of the Gospel of Jesus According to St. John Being an Interpretation thereof By Sri Parananda | William Hutchinson & Co. Trafalgar Building Charing Cross 1902 |
| 2. | Riots and Martial Law in Ceylon — 1915 | St. Martin Press 15, Craven Street Strand, London 1916 |
| 3. | Select Speeches of Ponnambalam Ramanathan Delivered in the Legislative Council of Ceylon (2 volumes) | The Ceylon Daily News Press 1929 |
| 4. | The Culture of the Soul Among Western Nations | G. P. Putnam's Sons New York & London 1907 |

## இராமநாதன் அம்மையார்
## இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | The Ramayana | W. E. Bastian and Co.<br>Colombo<br>1931 |
| 2. | Western Pictures for<br>Eastern Students | W. Thacker and Co.<br>2, Creed Lane<br>W. E.<br>1907 |

## இராமநாதன் பற்றிய நூல்கள்

### தமிழ்

| | | |
|---|---|---|
| 1. | பொன். இராமநாதன்<br>அவர்கள் சமாதிப் பேறு<br>அன்பர்கள் இயற்றியது | திருமகள் அச்சியந்திரசாலை<br>சுன்னாகம்<br>1932 |
| 2. | ஸ்ரீராமநாத மான்மியம்<br>ஸ்ரீமாந். ச. பொன்னம்பல<br>பிள்ளை | கலாநிதியந்திரசாலை<br>பருத்தித்துறை<br>1932 |

### ஆங்கிலம்

| | |
|---|---|
| The Life of Sir Ponnambalam<br>Ramanathan<br>M. Vythilingam | Ramanathan Commemoration<br>Society, Colombo<br>1971 |

இந்நூலுக்கு மேலே குறித்த நூல்களிலிருந்தும்,

| | | |
|---|---|---|
| 1. | கலாயோகி ஆனந்த கெ.<br>குமாரசுவாமி — கலாகேசரி<br>ஆ. தம்பித்துரை | வட இலங்கைத்<br>தமிழ்நூற் பதிப்பகம்<br>சுன்னாகம்<br>1971 |
| 2. | இலங்கையில் திராவிடக்<br>கட்டிடக் கலை<br>கலாநிதி கா. இந்திரபாலா | குமரன் அச்சகம்<br>கொழும்பு<br>1970 |

ஆகிய நூல்களிலிருந்தும்,

| | | |
|---|---|---|
| 3. | The Aim of the Students<br>at<br>Parameshvara College<br>by<br>The Hon. Sir Ponnambalam<br>Ramanathan<br>K. & K. C., C. M. G. | Thirumakal Press<br>Chunnakam |

என்னும் துண்டுப் பிரசுரத்திலிருந்தும் மேற்கோள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# பிழை திருத்தம்

| பிழை | திருத்தம் | பக்கம் |
|---|---|---|
| இமராமநாதன் | இராமநாதன் | 12 |
| இரமநாதனின் | இராமநாதனின் | 19 |
| தெல்சியகமுவ | தெல்லியகமுவ | 27 |
| தெரிகின்றன | தெரிகின்றது | 32 |
| நமது | தமது | 37 |
| இராநாதன் | இராமநாதன் | 45 |
| பராதேதசம் | பாரததேசம் | 46 |
| கிழள்ந்து | கிளர்ந்து | 46 |
| திழைத்தவர் | திளைத்தவர் | 49 |
| பஷ்யம் | பாஷ்யம் | 53 |
| உறுபினராயிருந்த | உறுப்பினராயிருந்த | 56 |
| இராசந்திர நிபுணர் | இராசதந்திர நிபுணர் | 67 |
| K. | Kt. | 76 |

**பின்வரும் நூல் இராமநாதன் இயற்றிய நூல்களின் வரிசையில் விடப்பட்டுள்ளது :**

The Gospels of Jesus
According to St. Mathew
As Interpreted to
R. L. Harrison
By the Light of
The Godly Experience
By
Sri Parananda

Kegan Paul,
Trench,
Trubner & Co. Ltd.,
Paternoster House,
Charing Cross Road,
1898.

153031

PARAMESHVARA COLLEGE BOARD OF DIRECTORS

திரிகரண சுத்தியும்
காரிய சித்தியும்
அருள்வாய்

JAFFNA

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்